Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :264 ஆவணி 04 ஆம் நாள் வியாழக்கிழமை 20 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051




# போகிறது 19 வருகிறது 20

## அமைச்சரவை நேற்று முடிவு

கொழும்பு, ஓகஸ்ட் 20

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்து, 20ஆவது அரசமைப்புத் திருத்தத்தை உருவாக்குவதற்கான வரைபைத் தயாரிக்க ராஜ பக்சக்கள் தலைமையிலான அமைச்சரவை நேற்று முடிவு செய்துள்ளது. 15

# 9ஆவது நாடாளுமன்ற கன்னி அமர்வு இன்று

கொழும்பு, ஓகஸ்ட் 20

9ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு இன்று நடைபெறவுள்ளது. முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகும் அமர்வில் முதல் தெரிவாகப் புதிய சபாநாயகர் நியமிக்கப்படுவார்.

மஹிந்த யாப்பா அபேவர்தன புதிய சபாநாயகராக ஏகமனதாக தெரிவுசெய்யப்படுவார் எனவும் ஆளுங்கட்சிவசம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை இருப்பதால் பதவிகளுக்கு போட்டி நிலவாது எனவும் அறியமுடிகின்றது. அதன் பின்னர் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகிய 15

## 20ஆவது சட்டத்திருத்தம்: உருவாக்க ஐவர் குழு

கொழும்பு, ஓக. 20

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டம் உருவாக்கத்துக்கான சட்டமூல வரைவை தயாரிப்படுத்த ஐவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நீதியமைச்சர் அலி சப்ரி, கல்வியமைச்சர் பேராசிரியர். ஜி.எல். பீரிஸ், தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, வெளிவிவகாரத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்தன மற்றும் சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோரே குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

20ஆவது திருத்தச் சட்டத்தை உருவாக்குவதற்கான சட்ட வரைவை உருவாக்கும் உபகுழுவின் நடவடிக்கைகள் செப்ரெம் 15



## 'கறாஜ்'ஜின் உள்ளே ஆயுத களஞ்சியம்!

### பொலிஸார் அதிர்ச்சி: ஒருவர் கைது

கொழும்பு, ஓக. 20

மீரிகம நால்ல பகுதியிலுள்ள வாகன பழுது பார்க்கும் நிலையமொன்றில் சட்டவிரோத ஆயுதக் களஞ்சியசாலை ஒன்று இயங்கி வந்தமையை 15

## தெல்லிப்பழை அம்மனுக்கு இன்று கொடியேற்றம்

தெல்லிப்பழை, ஓக. 20

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 நாள்கள் 15



## கிளிநொச்சி விபத்தில் 2 இளைஞர்கள் சாவு

### ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, ஓக. 20

கிளிநொச்சி முறிப்பு பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் மூவரில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றொருவர் படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 15

## முள்ளியவளை முறிப்பில் காணி அபகரிப்பு முயற்சி

### வனவளத் திணைக்களம் மீது உரிமையாளர்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஓக. 20

முல்லைத்தீவு, முள்ளியவளை முறிப்பில் உள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளைச் சுவீகரிக்க வனவளத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. நேற்றுக் 15

## அரச வங்கிகளில் முறைகேடு? விசாரிக்க குழு நியமனம்

கொழும்பு, ஓக. 20

அரச வங்கிகளில் இடம்பெற்றன என்று கூறப்படும் முறைகேடுகள் மற்றும் பயனற்ற செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கு பிரதமரும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ச குழுவொன்றை நியமித்துள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களை அடிப்படையா 15

## பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் இன்னும் 10,000 பேருக்கு வாய்ப்பு

கொழும்பு, ஓக. 20

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதற்காக மேலும் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்குவதற்கு அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய 15

## கிணற்றிலிருந்து குடும்பப் பெண் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ்ப்பாணம் கோப்பாய் இராச வீதியில் கிணற்றிலிருந்து குடும்பப் பெண் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 15

# புதிய சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று

**கொழும்பு, ஓக. 20**

**ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகின்றது. அதில் சபாநாயகர் தெரிவு இடம்பெற்ற பின்னர் புதிய சபாநாயகர் தலைமையில் கட்சித் தலைவர்களின் முதலாவது கூட்டம் சபாநாயகர் அலுவலகத்தில் நடக்கவுள்ளது.**

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளுமே இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர். அதில் அடுத்தகட்ட சபை நடவடிக்கைகள் தொடர்பாகவும், நிகழ்ச்சி நிரல் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளன.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல் மூலம் நாடாளுமன்றத்துக்குள் 6 அரசியல் கட்சிகளே அங்கம் வகித்தன. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இலங்கை தமிழரசுக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியனவே அங்கம் வகித்தன.

கடந்த பொதுத்தேர்தல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 15ஆக அதிகரித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி, எமது சக்தி மக்கள் கட்சி ஆகியவற்றுக்கு தலா ஒவ்வொரு தேசியப்பட்டியல் கிடைத்திருந்தது.

பொதுஜன பெரமுன, தேசிய மக்கள் சக்தி, இலங்கை தமிழ் அரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசியக் கட்சி, எமது சக்தி மக்கள் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், சுதந்திரக்கட்சி, முஸ்லிம் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே இம்முறை நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்றன. (எ-44)

## கண்டுகொள்ளப்படவில்லையா முல்லைத்தீவு மருத்துவமனை?

முல்லைத்தீவு, ஓக. 20

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக பல கோரிக்கைகள், போராட்டங்கள், கவனவீர்ப்புக்கள், பணிப்புறக்கணிப்புக்கள் முன்னெடுக்கப்பட்டபோதிலும் எவையும் கண்டுகொள்ளப்படவில்லை என்று பல தரப்பினரும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குத் தேவையான மருத்துவர்கள் இதுவரை நிரந்தரமாக நியமிக்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட மருத்துவமனை மருத்துவர்கள் மூன்றாவது தடவையாக நேற்றுக்காலை 8 மணி தொடக்கம் 24 மணிநேர பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளார்கள். இதையடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்ததாவது:

மாவட்ட மருத்துவமனையில் உள்ள மருத்துவர் பற்றாக்குறையினை நிவர்த்திசெய்ய பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டபோதும் மக்கள் போராட்டம் நடத்தியும் இதுவரை நிரந்தர மருத்துவர்கள் நியமிக்கப்படாத நிலை தொடர்ந்து வருகின்றது. இதனால் நோயாளர்கள் மருத்துவ சேவையினைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

பணிப்புறக்கணிப்புத் தொடர்பில் மாவட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உபதலைவர் வைத்தியர் சி.பிரபாகரன் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் மிக நீண்ட நாட்களாக நிலவிவரும் மருத்துவர் பற்றாக்குறையினைப் போக்க உரிய தரப்பினரை மீண்டும் மீண்டும் கோரியும் சாதகமான பதில் எவையும் கிடைக்காத நிலையில் மாஞ்சோலை மருத்துவமனையின் வைத்தியர் பற்றாக்குறையினை விரைந்து நீக்கக் கோரி இன்று பணி புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளார்கள் மருத்துவர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யக்கோரி பல தடவைகள் அடையாளப் புறக்கணிப்பு போராட்டங்கள் மூலம் உரிய தரப்பினருக்கு அறிவித்து இதுவரை புதிய நியமனங்கள் வழங்கப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நிரந்தர முயற்சிகள் கிடைப்பதைத் தடுக்கும் முயற்சியாகவே இது இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம். என்றார். (ம-19)

# பட்டதாரிகளுக்கு மீண்டும் வாய்ப்பு

## டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு மீண்டுமொரு வாய்ப்பு வழங்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஜனாதிபதி கோத்தாபய தெரிவித்தார் என்று டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகள் நியமனத்திற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் நியமனங்கள் கிடைக்காதவர்கள் மேன் முறையீடு செய்யும் பட்சத்தில் மீண்டுமொரு சந்தர்ப்பத்தினை வழங்க முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார். (ம)

## விபத்தில் காயமடைந்த இளைஞன் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 20

விபத்தொன்றில் காயமடைந்து மயக்கநிலையடைந்த 23 வயது இளைஞர் சுமார் ஆறு நாள்களின் பின்னர் நேற்று உயிரிழந்தார்.

மானிப்பாய் மேற்கைச் சேர்ந்த அந்த இளைஞன் கடந்த 13ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்றபோது இளவாலைப் பகுதியில் விபத்துக்குள்ளானார். இன்னொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியே அவர் காயமடைந்தார். இதையடுத்து மயக்கமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்று உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணைகளை விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

## பால்ராஜின் சகோதரர் நேற்றுக் காலமானார்!

முல்லைத்தீவு, ஓக. 20

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தளபதிகளில் ஒருவரான பிரிகேடியர் பால்ராஜின் மூத்த சகோதரர் கந்தையா சந்திரசேகரம் நேற்று உயிரிழந்துள்ளார். அவருக்கு 69 வயது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் வசித்து வந்த சந்திரசேகரம் நோயால் பீடிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார். கொக்குத்தொடுவாயில் அமைந்துள்ள, அவருடைய இல்லத்தில் இறுதிக் கிரிகைகள் இன்று இடம்பெற்று, பின்னர் கொக்குத்தொடுவாய் இந்து மயானத்தில் அவருடைய உடல் தகனம் செய்யப்படவுள்ளது. (எ-246)

## வகுப்புக்களை மீள ஆரம்பித்தல்

யாழ்ப்பாணம், ஓக. 20

"தகவல் தொழில் நுட்பப் பூங்காவில் கொரோனாத் தொற்றுக் காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ள வகுப்புக்கள் அனைத்தும் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் மீள ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார நெறிமுறைகளைப் பின்பற்றி மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினையை சர்வதேசத்துக்குக்காட்ட அணிதிரள்வோம்

## முல்லைத்தீவு உறவுகள் அழைப்பு

முல்லைத்தீவு, ஓக. 20

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை சர்வதேசத்துக்குக் காட்ட அனைவரும் அணி திரள வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளனர் முல்லைத்தீவுவாழ் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்.

நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசு வந்துள்ளது. அதன் பின்னர் அந்த அரசின் நிலைப்பாடு என்ன என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். 11 ஆண்டுகளாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களைத் தேடிக்கொண்டிருக்கும் இந்த நிலையில், நாம் எமது உறவுகளை ஒப்படைத்தவர்களே புதிய அரசில் அங்கம் வகிப்பது எமக்கு கூடுதல் சாதகம். அவர்களால்தான் எங்களின் பிரச்சினைக்கான முடிவுகள் எடுக்கமுடியும். இதற்கான பதிலும் தரமுடியும். இனி எந்த ஒருவரையும் சாட்டாகக் கதைக்க முடியாது. ஆனால் இவர்களால் எங்களுக்கான தீர்வினைத் தர முடியாது என்பதையும் நாங்கள் அறிவோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து எங்களுக்கான உண்மையான நீதி கிடைக்கவேண்டும்.



எதிர்வரும் 30ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட நாளில் எங்கள் பிரச்சனையை சர்வதேசத்திற்குக் கொண்டு செல்லவேண்டும் என்பதற்காக போராட்டத்தை நடத்தவுள்ளோம். நாங்கள் எங்கள் உறவுகளை ஒப்படைத்த அரசு ஆட்சியில் இருப்பதால் அவர்களிடம் இருந்து சர்வதேசம் நீதியினைப் பெற்றுத்தரவேண்டும் என்பதற்காகவும், நாடாளுமன்றம் செல்லும் மக்கள் பிரதிநிதிகள் எங்கள் உறவுகளை மீட்டுத்தரவேண்டும் என்பதற்காகவும், யாழ்ப்பாணம் பேருந்து தரிப்பிடத்தில் இருந்து கச்சேரி நோக்கி கவனவீர்ப்பு பேரணியை நடத்தவுள்ளோம் - என்றார். (ம-19)

# 19ஐ தூக்கி எறிவதற்கு அமைச்சரவை அனுமதி

**கொழும்பு, ஓக.20**

**அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை இரத்து செய்வதற்கும், 20 ஆவது திருத்தத்தை உருவாக்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் புதிய அரசின் கன்னி அமைச்சரவைக் கூட்டம் இன்று காலை இடம்பெற்றபோதே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.**

அதேவேளை, அரசிமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை நீக்குவது தொடர்பான அமைச்சரவை அறிக்கை நேற்று நடைபெறும் அமைச்சரவையின் முதல் கூட்டத்தில் தாக்கல் செய்யப்படும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி முன்பு தெரிவித்தார். அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை ரத்துச் செய்து, 20ஆவது திருத்தத்தை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று அமைச்சர் அலி சப்ரி கூறினார். "நாட்டிற்கு தீங்கு விளைவிக்கும் 19ஆவது திருத்தத்தின் உட்பிரிவுகள் அகற்றப்பட்டு திருத்தப்படும். அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய 20ஆவது திருத்தத்தை அறிமுகப்படுத்துவோம் என்று நம்புகிறோம்" என்றார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கான வரைவு திட்டத்தின் கீழ், ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாக இருக்கும், அதே நேரத்தில் ஜனாதிபதி தேர்தலில் ஒருவர் இரண்டு முறை மட்டுமே போட்டியிட அனுமதிக்கப்படுவார். தற்போதுள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நீதி அமைச்சர், 20 ஆவது திருத்தம் சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளைப் பாதிக்காது. அது தொடர்ந்து செயற்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2020 ஆம் ஆண்டுக்கான மீதமுள்ள மாதங்களுக்கான அரச நிதியை ஒதுக்கும் இடைக்கால கணக்கறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

# மாகாணத் தேர்தலில் மெகா கூட்டணி!

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டம்

கொழும்பு, ஓக.20

ஐக்கிய தேசியக் கட்சியையும் இணைத்துக்கொண்டு பரந்துபட்ட கூட்டணியின் கீழ் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கின்றது என்று அந்தக் கட்சியின் உறுப்பினர் ஜே.சி.அலவதுவல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ரணில் மற்றும் சஜித் அணிகளின் சங்கமம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கி குறுகிய காலட் பகுதிக்குள் 54 ஆசனங்கள் கிடைத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான முதல் சுற்றில் நாம் வெற்றி பெற்றுவிட்டோம். அடுத்தடுத்த சுற்றுகளில் பலமான அணியாக களமிறங்கி வெற்றிபெற திட்டமிட்டுள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஓர் கூட்டமைப்பு. அதில் கட்சிகள் இணையலாம். ஐக்கிய தேசியக் கட்சி இணைந்தால்கூட அந்தக் கட்சியையும் இணைத்துக்கொண்டு பரந்துபட்ட கூட்டணியின் கீழ் தேர்தலை சந்திக்கலாம். அது மேலும் வலுவாக இருக்கும். எனவே, ஐ.தே.க. எம்முடன் இணைவதை நாம் வரவேற்போமே தவிர ஒருபோதும் எதிர்க்கமாட்டோம்- என்றார். (எ-44)

# அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு தண்டம்

சாவகச்சேரி,ஓக.20

அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றியவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, நேற்றுப் புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

# சபாநாயகர் சிக்கல் இல்லை; கோத்தா உரைக்கு விளக்கம்

## ஐக்கிய மக்கள் சக்தி முடிவு

கொழும்பு, ஓக.20

ஆளும் கட்சியால் முன்மொழியப்படும் சபாநாயகரை வழி மொழிந்து ஏற்றுக்கொள்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. அதில் நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டது. ஆளுங்கட்சி பெரும்பான்மைப் பலத்துடன் இருப்பதாகவும், சபாநாயகர் என்பவர் பொதுவாகச் செயற்பட வேண்டியவர் என்பதால் ஆரம்பத்திலேயே அவருக்கு எதிர்ப்பை வெளியிடாமல், ஆளுங்கட்சியால் முன்வைக்கப்படும் பெயரை எதிர்ப்பின்றி வழிமொழிவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் முன்வைக்கப்படும் கொள்கை விளக்க உரை மீது விவாதம் கோருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முடிவெடுத்துள்ளது.

அதேவேளை, 8 ஆவது நாடாளுமன்றத்தில் சபாநாயகர் கரு ஜயசூரியவின் பெயரை ரணில் விக்கிரமசிங்க முன்மொழிய, அதை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா வழிமொழிந்திருந்தார். (எ-44)

# சிகரெட், மது விற்பனைக்கு மிகவிரைவில் புதிய சட்டம்?

கொழும்பு, ஓக.20

சில்லறையாக தனி சிகரெட் மற்றும் 180 மில்லி லீற்றர் மதுபான போத்தல் விற்பனை ஆகியவற்றைத் தடைசெய்யும் புதிய சட்டத்தை உருவாக்க வேண்டும் என்று புகைத்தல் மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அதேவேளை, பொது இடங்களில் புகைப்பிடிப்பவர்களுக்கு எதிராக இனி கடுமையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என தேசிய அதிகார சபையின் தலைவர் விசேட வைத்தியர் சமுதி ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மதுபான விற்பனையில் 180 மில்லி லீற்றர் (அரை போத்தல்) அதிகளவில் விற்பனையாகின்றது. அதனால் அதிகளவில் சமூக விரோத செயற்பாடுகள் இடம்பெறுவதுடன், சுற்றுபுற சூழலும் பெரிதளவு பாதிக்கப்படுகிறது. நாற்கூலி பெறுபவர்களின் அன்றாடத் தேவையாகவும் 180 மில்லி லீற்றர் மதுசார போத்தல்கள் காணப்படுகின்றன.

தனி சிகரெட் விற்பனையைத் தடைசெய்ய வேண்டும் என்ற யோசனையை 2019ஆம் ஆண்டு அமைச்சரவையில் இரண்டுமுறை முன்வைத்தோம். ஆனால் எவ்வித முன்னேற்றகரமான தீர்மானங்களும் கிடைக்கவில்லை. மதுபானம், புகைத்தல் ஆகியவற்றுக்கான வரி அதிகரிக்கப்பட வேண்டும்.

இந்த இரு விடயங்களால் அரசு ஒருபுறம் அதிக வருவாயை ஈட்டினாலும், அதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கு வருவாயை காட்டிலும் இரு மடங்கான நிதியைச் செலவிடுகிறது.

தனி சிகரெட் விற்பனை மற்றும் 180 மில்லி லீற்றர் மதுபான போத்தல் விற்பனை ஆகியவற்றைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை புதிய அரசிடம் முன்வைத்துள்ளோம். சாதகமான தீர்வு கிடைக்கும் என்றும் எதிர்பார்க்கிறோம். அத்துடன் வெற்றிலை விற்பனை தொடர்பிலும் மாற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. என்றார். (எ)

# யாழில் 1500 பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

## உமாச்சந்திரா பிரகாஷ் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 20

பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் திட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், யாழ்ப்பாண மாவட்டத்தில் அவ்வாறு நிராகரிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1500 ஐ கடந்துள்ளதுள்ளது என ஐக்கிய மக்கள் சந்தியின் உறுப்பினர் உமாச்சந்திரா பிரகாஷ் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊட கவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச வேலைக்கு விண்ணப்பித்தவர்களில் ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கத்துவம் உள்ள காரணத்தினால் 220 பட்டதாரிகளின் விண்ணப்பங்களும், இலங்கை பல்கலைகக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்வி கற்ற 875 பட்டதாரிகளின் விண்ணப்பங்களும், இலங்கை பல்கலைகக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படாத பல்கலைக்கழகங்களில் கல்வி கற்ற 110 பட்டதாரிகளின் விண்ணப்பங்களும், ஆவணங்களில் உள்ள குறைபாடுகள் காரணமாக 261 பட்டதாரிகளின் விண்ணப்பங்களும், ஏனைய காரணங்களுக்காக 40 பட்டதாரிகளின் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன என்றார். (ப)

# பொலிஸ் அதிகாரி கைது

கொழும்பு, ஓக. 20

பொலிஸ் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அண்மையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியகத்தின் அதிகாரிகளுடன் இணைந்து, சுற்றிவளைப்புக்களில் ஈடுபட்ட இந்த அதிகாரி, அவ்களுடன் இணைந்து போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. (ப)

# தமிழர்களின் தனித்துவத்துக்கு அரசு மதிப்பளிக்க வேண்டும்

## வலியுறுத்தினார் சாள்ஸ் எம்.பி

**மன்னார், ஓக. 20**

**கடந்த அரசாங்கத்தைப் போல் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளாது தமிழர்களின் தனித்துவத்துக்கு ஊறுவிளைவிக்காமல் இவ் அரசாங்கம் செயல்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.**



ஆஸ்திரேலியா நாட்டின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் காரியாலயத்திலிருந்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னாருக்கு வந்த பிரதித் தலைமைத்துவ அதிகாரி விக்டோறியா கோக்கிலி, நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் ஜனநாயகத்துக்கு அமைவாகத் தங்கள் வாக்குகளை அளிக்க முடியாத நிலை காணப்பட்டது. அதாவது பெருந்தொகைப் பணம் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு பணத்துக்கு அடிமையாக்கப்பட்ட நிலையே வன்னி மாவட்டத்தில் இருந்தது. அத்துடன் எக் கட்சி வந்தாலும் இளைஞர் யுவதிகளுக்கு தங்கள் கட்சியால் மட்டுமே வேலைவாய்ப்பு வழங்க முடியும் என்ற நிலையை உருவாக்கி அவர்களைத் தங்கள் வசம் ஈர்த்தமையும் வெளிச்சமாகியது. தமிழ் மக்களின் தனித்துவத்திற்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் அரசாங்கம் செயல்பட வேண்டும். குறிப்பாக 2010 லிருந்து 2015ஆம் ஆண்டு வரை தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. ஆனால் கடந்த அரசில் 2015க்குப் பிறகு தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்து க்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாத நிலை காணப்பட்டது. ஆகவே தமிழர்களின் தனித்துவத்துக்கு மதிப்பளித்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்ளாது அரசு செயல்படுமானால் அவற்றைக் கவனத்தில் எடுத்து அதன் பின் என்ன முடிவு எடுப்பது என நாங்கள் சிந்திப்போம் - என்றார். (ப-60)

# கப்பல் விபத்து; மாலுமிகள் கைது

கொழும்பு, ஓக.20

மொரிசியஸ் தீவுகளுக்கு அருகில் பவளப்பாறை மீது மோதி விபத்துக்கு உள்ளான ஜப்பான் நிறுவனத்துக்குச் சொந்தமான எரிபொருள் கப்பலின் மாலுமி மற்றும் இரண்டாவது மாலுமி ஆகியோரை மொரிசியஸ் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்த வர்த்தகக் கப்பலில் மாலுமியாக சுனில் குமார் கன்டேஸ்வர் என்ற இந்தியர் கடமையாற்றி வந்ததுடன், இரண்டாவது மாலுமி இலங்கையைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடற்கொள்ளை மற்றும் சமுத்திர வன்முறையின் கீழ் இந்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக மொரிசியஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஜுலை மாதம் 25ஆம் திகதி பவளப்பாறையில் மோதியதில் சேதமடைந்த கப்பலில் இருந்து ஆயிரம் தொன் எரிபொருள் இந்து சமுத்திரத்தில் கலந்துள்ளது.

இதனால் தற்போது பல சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. சிங்கப்பூரில் இருந்து பிரேசில் நோக்கிச் செல்லும் போதே கப்பல் விபத்துக்கு உள்ளாகியது.

கரையோரமாகப் பயணித்த காரணத்தால்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று விசாரணைகளில் உறுதியாகியுள்ளது என மொரிசியஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ப)

# தற்கொலை தாக்குதல்; அறிக்கைகளில் முழுமையில்லை

கொழும்பு ஓக. 20

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களுடன் தொடர்புடைய, 18 முழுமையற்ற விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் மீண்டும் பதில் பொலிஸ்மா அதிபருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன,

சம்பவம் தொடர்பில் உரிய முறையில் விசாரணைகளை நிறைவு செய்யுமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷாரா ஜயவர்தன தெரிவித்துள்ளார். (ப)

# சஹ்ரானுக்கு பாதுகாப்பான புகலிடமாக இந்தியா இருந்தது

## அரச புலனாய்வுச் சேவை இயக்குநர் சாட்சியம்

கொழும்பு, ஓக. 20

தேசிய தௌவ்ஹீத் ஜமாஅத்தின் தலைவர் சஹ்ரான் ஹாஷிம் மற்றும் அவரது நண்பர்களுக்கு இந்தியா ஒரு பாதுகாப்பான புகலிடமாக இருந்தது என இலங்கையின் எஸ்.ஐ.எஸ் என்ற அரச புலனாய்வு சேவை இயக்குநர் நிலந்தா ஜயவர்தன சாட்சியம் அளித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் அவர் நேற்று முன்தினம் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு முன்னர் சஹ்ரானும் அவரது நண்பர்களும் பலமுறை இந்தியாவுக்குச் சென்று தங்கியிருந்ததார்கள். தாக்குதலை நடத்த அவர்கள் தயாராக இருப்பது குறித்த விவரங்களை வெளிநாட்டு உளவுத்துறை மூலம், இலங்கையின் அரச புலனாய்வுப் பிரிவு பெறவில்லை. தாக்குதலை நடத்துவதற்கான திறனுக்கும், ஆயத்தத்திற்கும் பெரிய வித்தியாசம் உள்ளது. குறிப்பிட்ட வெளிநாட்டு உளவுத்துறை அறிக்கையில் சஹ்ரானின் தாக்குதலை நடத்துவதற்கான திறனைப் பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தை ஒரு திட்டவட்டமான இலக்காகவும், நாடு முழுவதும் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களும் இலக்காக குறிப்பிட்டிருந்தன. வெளிநாட்டு உளவுத்துறை அறிக்கையின்படி, 'முக்கியமான தேவாலயங்கள்' தாக்கப்படலாம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. முக்கியமான தேவாலயங்கள் என்று கூறும்போது நாட்டில் 100க்கும் மேற்பட்டவை இருக்கக்கூடும் எனவே இலங்கையின் அரச புலனாய்வுச் சேவை இந்த தகவலை உளவுத்துறை தொடர்பான ஏனைய அதிகாரிகளுக்கு அனுப்பாமல் அதனை மேலும் ஆராய்வதற்குத் தீர்மானித்தது. சஹ்ரானின் குழுவினர் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பிடம் ஆயுதங்கள் சேகரிப்பது குறித்து தகவல் கிடைக்கவில்லை. எனினும் நுவரெலியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் முஸ்லிம்களின் ஒரு குழுவுக்கு சஹ்ரான் ஆயுதப் பயிற்சி அளித்ததார் என எஸ்.ஐ.எஸூக்கான தகவல் கிடைத்தது. இந்த விடயங்களை வைத்துக்கொண்டு குறிப்பிட்ட வெளிநாட்டு உளவுத்துறைத் தகவல்களை இலங்கையின் அரச புலனாய்வுத்துறை புறக்கணித்தது என்று அர்த்தமல்ல - என்றார். (ப)


# ஆணைக்குழுவில் ஷானி அபேசேகர

கொழும்பு, ஓக. 20

சி.ஐ.டி.எனப்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஷானி அபேசேகர நேற்று அரச ஊழியர்களை அரசியல் ரீதியாகத் துன்புறுத்திய அனைத்து வழக்குகளையும் விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் ஆஜரானர்.

சிறைச்சாலை அதிகாரிகள் அவரை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு அழைத்துச் சென்றனர்.

பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹம்மட் சியாம் படுகொலை வழக்கில் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட வெலிவேரிய பகுதி ஆயுதக் கிடங்கு விவகார விசாரணைகளில், சந்தேக நபர்களைக் கைது செய்ய புதிதாகச் சாட்சியங்களை உருவாக்கியமைக்காக ஷானி அபேசேகர கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)



# பிரிவுபசார நிகழ்வு

சாவகச்சேரி.ஓக. 20

தென்மராட்சி கல்வி வலயத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும், சி.நாகராசா (சமூகக்கல்வி) , அ.கதிர்காமநாதன் (கணிதம்) ஆகியோருக்கான பிரிவுபசார நிகழ்வு நடைபெற்றது.

வலய ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு வலய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் மற்றும் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் ,உதவிக்கல்விப் பதிப்பாளர்கள்,சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், சங்க உறுப்பினர்கள் ஆகியோர் உரையாற்றினர். (ஜ -9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாற்றத்துக்கான எதிர்பார்ப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பெறுபேறுகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடைந்த பெரும் பின்னடைவை தெளிவாகவே புலப்படுத்தியுள்ளன. 2015ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் 16 ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இம்முறை 10 ஆசனங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலுவான கோட்டையாகக் கருதப்பட்ட வடக்கு, கிழக்கில் இம்முறை அதிகூடிய தனிநபர் வாக்குகளை யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், வன்னியில் பொதுஜன பெரமுனவும், மட்டக்களப்பில் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும் திருகோணமலையில் ஐக்கிய மக்கள் சக்தியும், அம்பாறையில் பொதுஜன பெரமுனவும் பெற்றுள்ளன. அதாவது எந்த ஒரு தேர்தல் மாவட்டத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எந்த ஒரு தேர்தல் வேட்பாளரும் அதிகூடிய வாக்குகளைப் பெறவில்லை.

இந்த நிலைமையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் தலைமைச் சக்தியாக விளங்கி வந்த ஒரு நிலைமையிலிருந்து கனிசமான அளவு பின்னடைவுக்குள் தள்ளப்பட்டுவிட்டது என்பதைத் தெளிவாகவே புலப்படுத்துகிறது. இதற்கான காரணம், மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்பான அவநம்பிக்கை முளைவிட்டு வளர்ச்சியடைய ஆரம்பித்திருக்கிறது என்ற உண்மையேயாகும்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுமளவுக்கு தவறான போக்குகள் உருவாகி வளர்ச்சியடைந்து வருகின்றன என்றே கருத வேண்டியுள்ளது. இப்படியான நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒட்டுமொத்தமாகவும், அதை வழி நடத்தும் தலைமையும், தங்களது நடவடிக்கைகள் தொடர்பாக சுயவிமர்சன அடிப்படையில் மீளாய்வு செய்யவேண்டிய ஒரு கட்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஏற்கனவே இடம்பெற்ற தவறுகளை இனங்கண்டு அவற்றைத் திருத்திக்கொள்ளவும், மேலும் அவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் ஒரு புத்தெழுச்சியுடன் துரிதமாக முன்செல்வதற்குமான வழிகளைக் கண்டறிய வேண்டும். இதுவே இன்று தமிழ் மக்களிடமுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பான எதிர்பார்ப்பாகும்.

அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளராக இதுவரை செயற்பட்டு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்களுக்குப் பதிலாக ரெலோ அமைப்பைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்ற கருத்து முன்வைக்கப்பட்டிருந்தது. 2010ஆம் ஆண்டு தொடக்கம் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அவர்களும், 2015ஆம் ஆண்டு தொடக்கம் தமிழரசுக்கட்சியின் சார்பில் சுமந்திரன் அவர்களும் ஊடகப் பேச்சாளர்களாகச் செயற்பட்டு வந்த வகையில், 2020இல் இருந்து ரெலோ அல்லது புளொட் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அப்பதவியை வகிக்க வேண்டுமென்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

இந்தக் கருத்தைப் பொறுத்த வரையில் நியாயம் உள்ளது என்பது உண்மைதான். ஆனால் இந்தப் பொறுப்பு மாற்றம் மட்டும் போதுமானதாக இல்லை. அதற்கு மேலதிகமாக, எடுக்கப்பட வேண்டிய சில நடவடிக்கைகள் தொடர்பாக முயற்சிகளை மேற்கொள்வது ஆரோக்கியமான ஒரு எதிர்காலத்துக்கு வழி சமைக்கும் என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

2015ல் இருந்து சுமந்திரன் ஊடகப் பேச்சாளராக செயற்பட்டிருந்த காலப்பகுதியில், அவர் கட்சியின் கொள்கைகளுக்கும் தமிழ்த் தேசியத்துக்கும், தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் எதிராகத் தான்தோன்றித்தனமாக வெளியிட்ட கருத்துக்களும், தமிழ் மக்கள் மேல் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டவை இனவழிப்பு நடவடிக்கைகள் அல்ல எனவும் போர்க்குற்ற விசாரணை முடிவடைந்து விட்டது எனத் தெரிவித்த கருத்துகளும் தமிழ் மக்கள் மத்தியில் பல குழப்பங்களை உருவாக்கின. அவற்றின் ஒட்டுமொத்த விளைவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இன்றைய பின்னடைவுக்குக் காரணமாகும்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளராக சுமந்திரன் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பாகவும், அவரது நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆழமான பக்கச் சார்பற்ற விரிவான ஒரு விசாரணை நடத்தப்பட வேண்டும் அவ்விசாரணையின் பெறுபேறுகளுக்கு அமைய, சுமந்திரன் அவர்கள் மீதும் அவருடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தும் வகையில் செயற்படுபவர்கள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவ் விசாரணைகளும் அவற்றின் முடிவுகளும், படுமோசமான குற்றவாளிகளையே தப்ப வைக்கும் 'அப்புக்காத்துப் பாணியில்' அமைந்துவிடாமல், நியாயபூர்வமான முறையில் இருக்க வேண்டுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் மாற்றம் என்பது ஒரு ஆரோக்கியமான மாற்றத்துக்கான ஆரம்பமாக இருக்க வெண்டுமென்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.



# இலஞ்சக் குற்றச்சாட்டில் கைதான இ.போ.ச. முகாமையாளர் மறியலில்

**யாழ்ப்பாணம், ஒக.20**
**இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்று உத்தரவிட்டது.**

ஒருவரிடம் முறைப்பாடு ஒன்றை சீர் செய்வதற்காக 60 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்டபோதே அவர் மன்னார் சாலையின் பின்புறத்தில் வைத்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைதுசெய்யப்பட்டவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை 27 ஆம் திகதி சிறைச்சாலை அதிகாரிகள் ஊடாக கொழும்பு பிரதான நீதிவான் மன்றத்தில் முற்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

(எ-56)



## 807 கிலோ உலர் மஞ்சள் கடற்படையினரால் மீட்பு

மன்னார்,ஓக.20
மன்னார் வங்காலை மற்றும் நுரைச்சோலைக் கடற்கரைகளிலிருந்து சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட, 807 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் பொதிகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.
சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நுரைச்சோலை கடற்கரையில், கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போது, இரண்டு டிங்கி படகுகளுடன் 700 கிலோ கிராம் (14 சாக்குகள்) உலர் மஞ்சள் கைப்பற்றப்பட்டது. கற்பிட்டியைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.
அதேவேளை வங்காலை கடற்கரையில் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையில், கடற்கரையில் இருந்த சாக்குப் பைகளில், சுமார் 107 கிலோ கிராம் மஞ்சள் கைப்பற்றப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

## பிள்ளையான் கொழும்பு பயணம்!

மட்டக்களப்பு, ஓக.20
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேச்துரை சந்திரகாந்தன் பலத்த பாதுகாப்புடன் நாடாளுமன்ற அமர்வுக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.
ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் 2015ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றார். கடந்த பொதுத் தேர்தலில் சிவநேசதுரை சந்திரகாந்தன் 54 ஆயிரத்து 198 விருப்பு வாக்குகள் பெற்று நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியிருந்தார். 9ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கன்னி அமர்வு இன்று நடைபெறவுள்ளது. அதில் கலந்துகொள்வதற்காக நீதிமன்றத்தின் அனுமதியுடன் மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து அவர் நாடாளுமன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.
இவர் இன்று நடைபெறும் நாடாளுமன்றக் கன்னி அமர்வில் நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார். (எ-46)

## சஜித், மைத்திரி இரகசிய பேச்சு?

கொழும்பு, ஓக.20
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே தொலைபேசி கலந்துரையாடல் நடந்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்த தொலைபேசி கலந்துரையாடலில் தங்களுடன் இணைந்து செயற்படும்படி மைத்திரிக்கு சஜித் அழைப்பு விடுத்திருந்தார் என்று சிங்கள மொழி இணையத்தளங்கள் சிலவற்றில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இதுபற்றி ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்களிடம் வினவியபோது, அவர்கள் இருவருக்கும் இடையே எந்தவொரு கலந்துரையாடலும் இடம்பெறவில்லை என்று கூறினர்.
சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியுடன் இணைவதற்கான எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (எ)

## மின் பயன்பாட்டில் சிக்கனம் அவசியம்

### மின்சார சபை வேண்டுகோள்

கொழும்பு, ஓக.20
அவசியமற்ற மின் உபகரணங்களை காலை 8 மணி முதல் இரவு 10 மணிவரை பயன்படுத்தவேண்டாம் என்று இலங்கை மின்சார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.
லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக நாட்டில் சுழற்சிமுறை மின் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் தினமும் இரண்டே முக்கால் மணி நேரம் மின் துண்டிக்கப்படுகின்றது.
இந்த நெருக்கடி நிலை வழமைக்கு திரும்பும் வரை மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று மின்சார சபை பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

# பால் உற்பத்தியை ஏற்றுமதி மட்டத்துக்கு கொண்டு வருவதற்கு கவனம் செலுத்தப்படும்

## பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு



**கொழும்பு, ஓக.20**

**எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் இந்த நாட்டின் பால் உற்பத்தியை, நாட்டின் பால் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு மேம்படுத்துவதற்கும் அதை நுகர்வுக்கு அப்பால் ஏற்றுமதி மட்டத்துக்கு கொண்டு வருவதற்கும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

பால் உற்பத்தித்துறையுடன் தொடர்புடைய அமைச்சர்கள் உள்ளிட்ட அத்துறை சார்ந்த அரச நிறுவனத் தலைவர்களுடன் அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு குறித்து ஜனாதிபதி செயலணி கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதுடன், அதன்படி உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக பெரியளவிலான பால் பண்ணைகள் மற்றும் சிறிய அளவிலான பால் பண்ணைகளை அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

உள்ளூர் பால் தேவை 1200 மில்லியன் லீற்றராகும். தற்போது உற்பத்தி செய்யப்படும் பாலின் அளவு 420 மில்லியன் லீற்றராகும். எஞ்சிய தேவையான பாலின் அளவு 780 மில்லியன் லீற்றர் என்ற போதிலும், திரவப் பால் பயன்பாட்டுக்கு மக்களை பழக்கப்படுத்தினால், மேலும் 400 மில்லியன் லீற்றர் பாலை கொண்டு உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

1 கிலோகிராம் பால் மாவை உற்பத்தி செய்வதற்கு சுமார் 8 லீற்றர் திரவப் பால் தேவைப்படுகிறது. அதன்படி, 1 கிலோகிராம் பால் மாவிலிருந்து தயாரிக்கக்கூடிய பால் கோப்பைகளின் அளவை விட 8 லீற்றர் திரவ பாலிலிருந்து தயாரிக்கக் கூடிய பால் கோப்பைகளின் அளவு மிக அதிகம். பால் விலை, பால் பசுக்களை இறக்குமதி செய்தல், புல்வெளிகளைப் பாதுகாத்தல், மக்காச்சோளம் சாகுபடி செய்தல் மற்றும் அதற்கான நிலம் ஒதுக்கீடு செய்தல், மக்காச்சோளம் சாகுபடியின் வெற்றிக்கு பயனுள்ள விதைகளை இறக்குமதி செய்து உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மக்காச்சோளத்தின் உற்பத்தித்திறனை ஒரு ஹெக்டேயருக்கு 3.8 மெட்ரிக் தொன்னிலிருந்து 7 மெட்ரிக் தொன் வரை உயர்த்த வேண்டும். அதன்படி, எதிர்வரும் பருவத்தில் பால் பண்ணையாளர்களுக்கு அவசியமான மக்காச்சோளம் பயிரிடத் தேவையான நிலங்களை விடுவிப்பது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ரி2)

# இலங்கைத் தமிழும் தமிழரும் ஆய்வரங்கில் இன்று

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ் நாடு மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து ஸூம்(Zoom) செயலி வாயிலாக 20 நாள்கள் இலங்கையில் தமிழும் தமிழரும் என்ற பொருளில் இணையவழியில் ஆய்வு மாநாட்டை முன்னெடுத்து வருகின்றன.

இதன் பத்தொன்பதாவது நாளாகிய இன்று வியாழக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை விரிவுரையாளர் கலாநிதி க.இரகுபரன் "இலங்கை தமிழ் ஊடகங்களின் மொழிப்பயன்பாடு" என்ற பொருளில் ஆய்வுரை ஆற்றவுள்ளார்.

இணையவழியில் பங்கேற்க விரும்பும் ஆர்வலர்கள் பின்வரும் கடவுச்சொல்லைப் பயன்படுத்திக் கலந்து பயன் பெற முடியும் எனத் தமிழ்ச்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ரி3)

Zoom meeting ID : 477 159 8996
pass word : wts

# சட்டவிரோத மீன்பிடிக்கு பயன்படுத்திய இயந்திரப்படகுகள், வலைகள் மீட்பு

மட்டக்களப்பு, ஓக.20

மட்டக்களப்பு கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று காலை சட்ட விரோத வலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடவிருந்த மூன்று இயந்திரப் படகுகள் மீட்கப்பட்டுள்ளதுடன் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் ருக்ஷான் குரூஸ் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள எல்லைக்குட்பட்ட நொச்சிமுனைப்பகுதியிலேயே இந்த மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று காலை விசேட அதிரடிப்படையினர், கடற்படையினர், இராணுவத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த சுற்றிவளைப்பின் போது சுமார் 35 இலட்சம் ரூபா பெறுமதியான சட்டவிரோத வலைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றம் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் ருக்ஷான் குரூஸ் தெரிவித்துள்ளார். (ரி2)







வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் செல்லும் தெற்கு புற வீதி வளைவு, கோயில் வீதியில் கைலாச பிள்ளையார் கோவிலடியில் அமையவுள்ளது. இந்த வளைவு அமைப்பதற்கான அடிக்கல் நடும் ஆகம வழிபாடு நேற்றுக் காலை 6.30 மணிக்கு இடம்பெற்றது. இந்த வழிபாட்டில் நல்லூர் சிவாச்சாரியார், ஆன்மீக பெரியோர்கள், ஆலயத் தொண்டர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ரி3)

# பளை, தருமபுரம் பகுதிகளில் வெடிபொருள்கள் மீட்பு



கிளிநொச்சி, ஓக.19

பளை மற்றும் தருமபுரம் பொலிஸ் பிரிவு களில் நேற்றையதினம் வெடிக்காத வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.


பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தர்மக்கேணி பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணியை ஜேசிபி இயந்திரத்தின் மூலம் துப்புரவு செய்த போது வெடிக்காத நிலையில் இருந்த 11 மோட்டார் குண்டுகள் மற்றும் 4 கைக்குண்டுகள் என்பன அடையாளம் காணப்பட்டன. பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட தைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அந்த இடத்தை அடையாளப்படுத்தினர். இதேவேளை, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணியைத் துப்பரவு செய்தவேளை விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு, பொலிஸாரால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவை தொடர்பில் நீதிமன்றில் அனுமதி பெற்று, அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கையை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ரி3-6)

# சுயதொழில் மேம்படுத்தல் பயிற்சி பட்டறை

மாங்குளம், ஓக.20

சுயதொழில் மேம்படுத்தல் பயிற்சி வகுப்பு கடந்த திங்கட்கிழமை மாங்குளம் உயிரிழை அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த உயிரிழை அமைப்பின் பயனாளிகள் இப் பயிற்சிப் பட்டறைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அபிவிருத்திக்கான உதவி ஊக்க இலங்கை மையத்தின் அனுசரணையுடன் பயசோனியா நிறுவனத்தின் ஊடாக உயிரிழை அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட சுயதொழில் சுழற்சி முறையிலான கடன் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகளின் தொழிலை எவ்வாறு மேம்படுத்தவேண்டும் என்பதற்கு அமைவாக இந்தப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. இந்தப் பயிற்சி பட்டறை வேல்ட் விசன் நிறுவனத்தைச் சேர்ந்த ஜெயால்ட் அன்ரனியால் தொகுத்து வழங்கப்பட்டது. (ரி3-222)



# இன்றைய நாள்

**மேடம்:** திருப்பங்கள் நிறைந்த நாள். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். ஆரோக்கியமான விவாதங்களில் ஈடுபடுவீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

**இடபம்:** நல்லது நடக்கும் நாள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்களை மேலதிகாரிகள் ஆதரிப்பர். சொத்து சம்பந்தப்பட்ட விஷயங்கள் நிம்மதியாக முடிவுக்கு வரும். பொதுநல சேவை செய்வீர்கள்.

**மிதுனம்:** சாதகமான சூழ்நிலை ஏற்படும் நாள். எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை அடைப்பீர்கள் பயணங்கள் தள்ளிப்போகும். விமர்சனங்கள் மனஉளைச்சலைத் தரும்.

**கடகம்:** தேவைகள் நிறைவடையும் நாள். சக பணியாளர்களால் இழந்திருந்த நிம்மதி மீளும். அழகும் இளமையும் அதிகரிக்கும். நிதி விவகாரங்களில் இருந்த அதிருப்தியான நிலை சற்றே மாறும்.

**சிம்மம்:** புதிய முன்னேற்றங்களை அடையும் நாள். வேலை தேடுபவர்களுக்குப் புதிய வாய்ப்புகள் புலப்படும். சுப நிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நிறைவேறும்.

**கன்னி:** பயம் தீரும் நாள். மருத்துவ சிகிச்சை சாதகமன பலனைத் தரும். எதிர்பாலினத்தினரால் இருந்து வந்த தொல்லைகள் தீரும். குடும்பத்தில் பகை மாறி பாசம் கூடும். வரவு திருப்தி தரும்.

**துலாம்:** எடுக்கும் முயற்சிகள் வெற்றியடையும் நாள். விசா தொடர்பான பிரச்சினைகளில் நல்ல தகவல்கள் கிடைக்கும். அதிகநேர விரயம் ஏற்படும். மனதில் மகிழ்ச்சி நிலவும்.

**விருச்சிகம்:** மன உறுதியுடன் செயல்படும் நாள். மருத்துவ செலவுகள் குறைந்து நிம்மதி கூடும். பிள்ளைகள் விரும்பிக்கேட்ட பொருளை வாங்கித்தருவீர்கள்.

**தனுசு:** பிரச்சினைகள் தீரும் நாள். ஒரு பெண் ஆதரவாகச் செயல்படுவார். குடும்ப நிலைமைகள் மேம்படும். நல்ல செய்திகள் வரும். ஒரு சிலரிடம் மாற்றத்தைப் பற்றி வியப்பீர்கள்.

**மகரம்:** மன குழப்பங்கள் அதிகரிக்கும் நாள். சிலர் உங்கள் கருத்தை ஏற்றுக் கொள்ள மறுப்பர். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வழக்குத் தொடுக்க வேண்டாம்.

**கும்பம்:** இனிமையான நாள். சக பணியாளருடன் ஒற்றுமை நன்றாக இருக்கும் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உறவினர்களால் மன மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** மனதில் அமைதி தவழும் நாள். கணவருக்கு முன்னேற்றமான சூழல் தெரியும். உடல் நிலை பற்றிய பயம் குறையும். குழந்தைகளின் நலன் நிம்மதியளிக்கும்.



வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்றுக் காலை 9 மணி யளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இம்முறை ஆலயத்தில் அன்னதான நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதோடு ஆலயத்துக்கு வரும் அடியவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டை பரிசோதனை செய்யப்பட்டு புகைப்படம் எடுக்கப்பட்ட பின்னரே ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஐ)

## வவுணதீவில் கொங்கிறீட் வீதிக்கான வேலைத்திட்டம் ஆரம்பம்

வவுணதீவில் கொங்கிறீட் வீதிக்கான ஆரம்பகட்ட வேலையை உத்தியோகபூர்வமாக தபால் சேவைகள் மற்றும் வெகுசன ஊடகத் தொழிற்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காயான்மடு கிராமசேவகர் பிரிவின் பிள்ளையார் கோயில் வீதியை கொங்கிறீட் வீதியாக செப்பனிடுவதற்கான ஆரம்பக்கட்ட பணிகளையே அவர் ஆரம்பித்துவைத்துள்ளார்.

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான இரண்டு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், சுமார் 170 மீற்றருக்கான வீதியாக இவ் வீதி புனரமைக்கப்படவுள் ளது. இந்த நிகழ்வானது காயான்மடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.தேவரூபன் தலைமையில் இடம்பெற்றது. (ரி2-46)



கிளிநொச்சி நகரின் ஏ9 வீதியின் இரு பக்கங்களிலும் இருந்த பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் ஏனைய கழிவுகள் நேற்றுமுன்தினம் கரைச்சி பிரதேச சபை பணியாளர்களால் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன. இந்தச் செயற்பாட்டில் தவிசாளர், உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ரி3-222)

## மஞ்சள் தட்டுப்பாடு ஒன்றரை ஆண்டுக்குள் நிவர்த்தி

கொழும்பு, ஓக.20

நாட்டில் மஞ்சளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை ஒன்றரை வருடங்களுக்குள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என சிறுதோட்ட பயிர் அபிவிருத்தி மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் மஞ்சள் செய்கையை விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவில் மஞ்சள் காணப்படுகிறதா? இல்லையா? என்பது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. விலையை அதிகரிக்கும் வரையில் மஞ்சளை மறைத்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாகவும், தற்போது அதிக விலையில் மஞ்சள் விற்பனை செய்யப்படுவதாகவும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இந்த முறைப்பாடுகள் குறித்து சுற்றி வளைப்புகளை மேற்கொள்ளுமாறு நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு அறிவித்துள்ளேன்- என்றார். (ரி2)

## மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **கிளிநொச்சி மாவட்டத்தில்** வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி, பொன்னாவெளி, பாலாவி ஆகிய இடங்களிலும்,

**வவுனியா மாவட்டத்தில்** பம்பைமடுவிலிருந்து குருக்கள்புதுக் குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து செங்கற்படை, வேளாங்குளம் கடற்படை முகாம், பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வாரிக்குட்டியூர் 04ம் வட்டாரம், நித்தியநகர் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

# கொரோனாத் தடுப்பூசி; தேவையெனில் நாடுங்கள்

## ரஷ்யத் தூதுவர் கோரிக்கை

**கொழும்பு, ஓக.20**
**ரஷ்யா உருவாக்கியுள்ள கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசியை இலங்கைக்கும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது என இலங்கைக்கான ரஸ்ய தூதுவர் யூரி பி. மெட்டேரி தெரிவித்துள்ளார்.**

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இதன்போது, வெளிவிவகார அமைச்சராக தினேஷ் குணவர்தன பொறுற்பேற்றமைக்கு அவர் வாழ்த்துத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள ரஷ்ய தூதுவர், இலங்கையின் பயன்பாட்டிற்காக தடுப்பூசியை அறிமுகப்படுத்த விருப்பம் தெரிவித்தார்.
தடுப்பூசி பெற ஆர்வமாக இருந்தால் ரஷ்யாவில் உள்ள குறித்த துறை சார்ந்த அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்திடம் அவர் கோரிக்கை விடுத்தார். இந்த நிலையில், நாட்டின் சுகாதார அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த பின்னர் இலங்கை பதிலளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ரி1)

# சிங்கராஜ வனப்பகுதி ஊடான வீதி நிர்மாணம் உடன் நிறுத்தம்



கொழும்பு, ஓக.20
சிங்கராஜ வனப்பகுதியின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட வீதி நிர்மாணப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆலோசனைக்கமைய நிர்மாணப் பணிகளை கைவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என வன ஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி ரத்னாயக்க தெரிவித்துள்ளார். சிங்கராஜ வனப்பகுதி ஊடாக கிராமிய பாதையொன்று காணப்பட்டது.
அதனைப் புனரமைக்குமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். அதனால் இவ்வீதியினை அகலப்படுத்தி சீர்செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.
இந்த வீதியை நிர்மாணிக்கும்போது பல மரங்கள் உள்ளிட்ட இயற்கை வளங்களை அழிக்க வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. அதனால் இது தொடர்பான சுற்றாடல் அறிக்கையொன்றை பெற்றுக்கொண்டு, அதற்கமைய செயற்படுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார் என அமைச்சர் சி.பி ரத்னாயக்க குறிப்பிட்டார்.
இந்த அறிக்கை கிடைக்கும் வரை நிர்மாணப் பணிகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.
இதேவேளை, இந்த வீதி நிர்மாணம் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படுமெனவும் வன ஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சிபி ரத்னாயக்க தெரிவித்துள்ளார். (ரி1)



# உற்பத்தித்திறன் பயிற்சிநெறி

முல்லைத்தீவு, ஓக.20
மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கில், புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான “உற்பத்தித்திறன்” தொடர்பான இரண்டு நாள் பயிற்சிநெறியின் முதற் கட்டப் பயிற்சி வகுப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.
முல்லைத்தீவு மாவட்டச் செயலக மனிதவள மேம்பாட்டு பிரிவு மண்டபத்தில் மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரை நடைபெற்ற இப் பயிற்சிநெறியின் வளவாளர்களாக, மாவட்டச் செயலக பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் க.லிங்கேஸ்வரன் மற்றும் கணக்காளர் ரா.றாஜீவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
இதேவேளை, எதிர்வரும் வியாழக்கிழமை இரண்டாம் நர்ள் பயிற்சிநெறி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3-222)

# கொரோனாப் பரவல் இளசுகளால் அதிகரிப்பு

ஜெனிவா, ஓக.20
இளம் சமூகத்தினரின் செயற்பாடுகள் காரணமாக கொவிட் 19 பரவல் அதிகரித்துள்ளது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. 20 வயது முதல் 40 வயதுவரையானோரை அடிப்படையாக வைத்து இத்தகவல் வெளியிடப்பட்டது. இவர்களில் பலர் தமக்கு கொரோனாத் தொற்று இருக்கின்றதா இல்லையா என்பது தொடர்பிலும் கொரோனா தொடர்பான தெளிவு இல்லாமலும் செயற்படுகின்றனர் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.
இவர்களின் இவ் அசமந்தப் போக்கு ஏனைய குழுக்களுக்கு கொரோனா வைரஸ் பரவும் அபாயத்தை அதிகரித்துள்ளது எனவும் சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ரிரீ)

# விபத்துக்கள் தொடர்பில் ஆராய கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஓக.20
கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறக்கூடிய வீதி விபத்துக்களைத் தடுப்பதற்குரிய வழிவகைகளை ஆராயும் பொருட்டு அனைத்து தரப்பினரதும் பங்குபற்றுதலுடனான கலந்துரையாடல் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.
நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த இரண்டாவது கலந்துரையாடலில் வைத்திய அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், வலயக்கல்வி திணைக்கள அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் போக்குவரத்துடன் தொடர்புள்ள துறைசார் திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.
மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளில் இடம்பெற்ற வீதி விபத்துக்களின் தரவுப்பகுப்பாய்வின் அடிப்படையில் வீதி விபத்துக்கள் அதிகரித்துச் செல்வதற்கான காரணிகள் இனங்காணப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டன. அத்துடன் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டன. (ரி3-222)







## மட்டக்களப்பில்

# உணவு பாதுகாப்பு தொடர்பில் செயலமர்வு

மட்டக்களப்பு, ஓக.20
உணவு கையாளும் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கான உணவு பாதுகாப்பு சம்பந்தமான செயலமர்வு வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.
இதன்போது, உணவு பாதுகாப்பு தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் தாக்கத்தின் பின்னர் மக்கள் நடமாட்டம் அதிகரித்து காணப்படும் நிலையிலும், மக்கள் உணவகங்களுக்கு அதிகம் செல்லும் நிலையிலும் மக்களின் பாதுகாப்பு கருதியே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இந்தச் செயலமர்வில் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுகளைச் சேர்ந்த உணவு கையாளும் நிறுவனங்களின் உரிமையாளர்கள், உணவு மருந்து பரிசோதகர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ரி2-150)

# அற்புத நாயகிக்கு இன்று கொடியேற்றம்



■ சிதம்பரவேணி

**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்தக் கட்டுரைகள் பிரசுரிக்கப்படுகின்றன.**

தெல்லிப்பழை என்ற பெயரை எவர் உச்சரித்தாலும் முதலில் ஞாபகத்துக்கு வருவது துர்க்கை அம்மனே ஆகும்.

திருகோணமலையில் பத்திரகாளி அம்மன் போன்று தெல்லிப்பழையில் அமர்ந்திருந்து எமக்கெல்லாம் துர்க்கை அம்பாள் திருவருள் சுரக்கிறாள்.

*கோடிப் பொன் கொண்டாரும்*
*உன்பால் அணுகிக் குறையிரப்பர்*
*வாடிக் கிடந்து வரங்கேட்பர்*
*அன்னார் வருத்தமெலாம்*
*தேடிப் பிடித்துத் திருத்தி*
*வழிகாட்டுந் தேவி மன்றுள்*
*ஆடித் திகழும் அருட்காளி*
*உன் தாள் அடைக்கலமே*

ஆம் அடியார்களே! எத்தனை கோடி கோடியாகப் பணம் இருந்தாலும், எத்தனை எத்தனை மாடிமனை, கோடி இன்பம் இருந்தாலும், சக்தி தனக்கே சரணமாகும் அந்த நிரந்தர இன்பத்துக்கு ஈடு இணை, இந்த உலகில் வேறு எதுவும் இல்லை. அது எவ்வளவு தூரம் உண்மை என்பதை தெல்லிநகர் ஸ்ரீ துர்க்கை அம்பாள் சந்நிதானத்தில் உணர்ந்து கொள்ளலாம்.

இலங்கையின் வடபால் தலைநகரமான யாழ்ப்பாணத்தின் வலி. வடக்கு பிரதேசத்தில், மல்லாகத்தின் எல்லையில், காங்கேசன்துறை வீதியோரத்திலே எட்டாங்கட்டை வைத்தியமனைக்கு முன்பாக, மூர்த்தி, தல, தீர்த்த மகிமையோடு நான்கு பக்கமும் விண்ணைத்தொட்டு நிற்கின்ற வானுயர்ந்த கோபுர தரிசனங்களோடு ஸ்ரீ துர்க்கை அம்பாள் கம்பீரமாக அமர்ந்திருந்து பக்தகோடி அடியார்களுக்குக் காட்சியும், மாட்சியும் தருகிறாள்.

**வரலாறு**

இற்றைக்கு 300 வருடங்களுக்கு முன்பாக, உழவுத் தொழிலானது இலங்கையின் வடபகுதியில், தன்னிறைவு பெற்று விளங்கிய காலகட்டத்தில், உழுகுடைப்பகுதியில் சைவ வேளாண்மை கொண்ட பரம்பரையில் உதித்தவர் தான் அருளொழுகு சிந்தையரான, சைவகலாசாரம் பேணிய கதிர்காமர் ஆவார்.

18 ஆம் நூற்றாண்டு நடுப்பகுதியிலே தல யாத்திரை செய்யும் பொருட்டு தோணியேறி கடல்வழிமார்க்கமாக இந்தியா சென்ற அவர். பல காலம் இந்தியாவிலேயே தங்கியிருந்து நாயன்மார்களால் பாடல் பெற்ற பல தலங்களையும் வணங்கி, தெய்வவாக்கோடு இயந்திரத்தகடுடன் திருமுகக் கெண்டி சகிதம் இலங்கைக்குத் தோணி மூலம் திரும்பினார்.

காங்கேசன்துறையில் வந்திறங்கியவர், கீரிமலையில் தீர்த்தமாடி,தமது வாழ்விடம் நோக்கி நடந்து வருகையில், நன்கு களைத்தவராய் ஓரிடத்தில் தங்கி உறங்கி விட்டார் அப்போது அவர் கனவில் அம்பாள் தோன்றி, "கதிர்காமா நீ கொண்டு வந்த இயந்திரத்தை நீ படுத்துறங்கும் இலுப்பை மரத்தடியில் தாம் இந்தியாவிலிருந்து கொண்டுவந்த இயந்திரத் தகட்டை வைத்து, சிறு பந்தல் அமைத்து வழிபடுவாயாக!. நீ எண்ணியது யாவும் உனக்குக் கிடைக்கும்"என்று வாக்குச் சொல்லி மறைந்து கொண்டாள். கதிர்காமர் திடுக்கிட்டு எழுந்து, அம்பாள் கனவில் கூறியபடி இலுப்பை மரத்தடியில் வைத்து காலை, மாலை வணங்கி வந்தார்.

அடர்ந்த பற்றைகளும், மரங்களும், பாம்பு பூச்சி, பூரான்கள், பறவைகள், ஆடு, மாடு, மந்தைகள் நிரம்பிய சூழலில் அம்பாள் குடியமர்ந்து, கதிர்காமரின் அன்பையும், அருளையும், பக்தியையும் கண்டு மெய் சிலிர்த்தாள். வேதமோ, ஆகமமோ, படிப்போ, பட்டமோ பெறாத கதிர்காமருக்கு நாளிலும், பொழுதிலும் அற்புதங்கள் காட்டத் தொடங்கினாள் அம்பாள். தெய்வபக்தி என்பது பெரிய பெரிய படிப்பினிலும் இல்லை. பெரும் பெரும் பட்டங்களிலும் இல்லை. மாலை மரியாதை மேடைப் பேச்சுக்களிலும் இல்லை என்பதை தெய்வங்கள் அன்றே எமக்கு உணர்த்தியிருந்தமை இன்றைய காலத்துக்கு மிகவும் தேவையானதொன்றாக உள்ளது.

கதிர்காமருடைய அம்பாள் இயந்திர விசேடமே, இன்றைய துர்க்கை அம்மன் ஆலயத்தின் பெரும் பேறாகும்.

**மகோற்சவம்**

ஆவணி மாத பூர்வ பட்சத்தில் வரும் பூர நட்சத்திரத்தில் கொடியேறி, திருவோண நட்சத்திரத்தில் தீர்த்த விழாவோடு மகோற்சவம் நிறைவு பெறும். பன்னிரண்டு தினங்கள் திருவிழா நடைபெறும்.

இன்று வியாழன்று கொடியேற்றம் நடைபெறுகிறது. தேர்த்திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதியும், மறுநாள் தீர்த்தோற்சவமும் சிறப்பாக நடைபெறும்.

1968 ஆம் ஆண்டிலிருந்து வருடாவருடம் மகோற்சவம் மிகவும் நேர்த்தியாக நடைபெற்றவண்ணமுள்ளது.

1948 இலும் 1965 இலும் உரியவாறு பரிபாலன அமைப்பு வகை செய்யப்பட்டது.

முதலாவது நிர்வாக சபையின் தலைவராக ஸ்ரீமான் தியாகராஜாவும், அவருக்குப் பின்னர் ஸ்ரீமான் ஜெயரட்ணமும், 1977 ஆம் ஆண்டு முதல் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும், 2008 முதல் ஸ்ரீமான் ஆறுதிருமுருகனும் ஆலயத்தை நிர்வகித்து அம்பாளை அற்புதமாக்கினர். ஆண்கள் மேலங்கி இல்லாமலும், பெண்கள் உரிய கட்டுக்கோப்பான விதத்திலும் வந்து ஆலயத்தைப் பெறுமதியாக்குகின்றனர்.

அழகுக்கு ஒப்பிட முடியாத பேரழகுடைய கோலத்தில் எழுந்தருளுகின்ற திருவீதியுலா கண்களைக் கவர்ந்து இழுக்கும் கலையழகு சொட்ட வல்லது. நாற்புறமும் அழகொழுகு சிற்ப சித்திர கோபுர வாசல்கள் அடேயப்பா! இந்திர சுவர்க்க வாயிலாகக் காட்சி தருகின்றன.

கிழக்கு வாசல் கோபுரம் 1980 இலும், தெற்குவாசல் கோபுரம் 2017 இலும், வடக்கு வாசல் கோபுரம் 2018 இலும், மேற்கு வாசல் கோபுரம் 2019 இலும் அதிசயமாகி அருள் பாலிக்கின்றன.

முதலாவது கும்பாபிஷேகம் 1965 இலும், இரண்டாவது கும்பாபிஷேகம் 1981 இலும், மூன்றாவது கும்பாபிஷேகம் 1997 இலும், நான்காவது கும்பாபிஷேகம் 2011 இலும் வெகுசிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் அறக்கட்டளை மூலம் 1989 இல் இருந்து பெரும் பெரும் சமூகப் பணிகள் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மகளிர் இல்லம், அவர்களுக்கான வீடமைப்புத் திட்டம், மருத்துவ சேவை, கல்விக்கான உதவுசேவை, மருத்துவமனைகளுக்கான அவசிய உதவிச் சேவை, அன்னதானம், வயோதிபர் இல்ல அன்பளிப்பு, வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட மாணவர்களுக்கான பல்கலைக்கழக நிதி உதவி என ஆலயத்தின் பெயரால் சேவைகள் தொடர்கின்றன.

கலாநிதி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் எண்ணக்கருவில் உதித்த, அத்தனை சேவைகளும் தேவஸ்தானத்தை புண்ணிய பூமியாக்குகிறது. அதில் நாமும் பங்காளிகளாகி அம்பாளது அனுக்கிரகம் பெற்றுய்வோம். ■

# துயரங்கள் போக்கும் துர்க்காதேவி

■ கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற, எல்லாம் வல்ல ஆதிபராசக்தியானவள், தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும், துயரங்களையும், இன்னல்களையும், இடுக்கண்களையும் நீக்கும் பொருட்டு தெல்லிப்பழையில் ஸ்ரீ துர்க்காதேவியாக எழுந்தருளி, வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். அந்த அருள்மிகு அம்பிகைக்கு இன்று கொடியேற்றம்.

உலகைக் காக்கும் பரம்பொருளின் அருட்சக்தியாக மிளிரும் ஸ்ரீ துர்க்காதேவியின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பெருந்திருவிழா இன்று கொடியேற்றத்துடன் கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில், தெல்லிப்பழை நகரில் அழகாக அமைந்திருக்கும் இந்த ஆலயம், வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு புகழ்பெற்ற அருள் மிகுந்த ஆலயமாகும்.

இங்கு எழுந்தருளி அருள்புரியும் அம்பிகை துர்க்காதேவியைத் தொடர்ந்து, உண்மையான நம்பிக்கையுடன் வழிபட்டால் நிச்சயம் அவளது அருள் கிடைக்கும்.

திருமண வயதை எட்டியிருக்கும் ஆண், பெண் இருபாலாரும் துர்க்காதேவியை வெம்பி அழுது, நம்பி வழிபட்டால் கூடிய விரைவில் அவர்களுக்கு விவாகம் கைகூடும் என்பதும் நம்பிக்கை. இவர்கள் தம்முடைய குறையை அம்பாளிடம் முறையிட்டு, நம்பிக்கையோடு வணங்கி, வழிபட்டு 9 செவ்வாய்க்கிழமைகளில் தொடர்ந்து திருவீதிவலம் வந்து,



பூப்போட்டு வணங்கி வர திருமணமானது தானாகவே பேச்சுக்காலாகி நடைமுறைக்கு வரும்.

இன்று முதல் தொடர்ந்து 12 நாள்களுக்கு அம்பிகையின் திருவிழா வெகு சிறப்பாக இடம்பெறும். யாழ்.குடா நாட்டின் பல பாகங்களிலிருந்தும், பக்தர்கள் பலரும் உண்மையான நம்பிக்கையுடனே இந்த ஆலயத்துக்கு வந்து வணங்கி வழிபட்டு ஆனந்திப்பர்.

இந்தக் கோயிலின் நிர்வாகம் ஆன்மீகச் சொற்பொழிவாளரும், சிறந்த சமூகத் தொண்டருமான ஆறு திருமுருகன் மேற்பார்வையில், சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு [illegible] திருவிழாவில் ஆசாரசீலர்களாக பக்தர்களைக் கலந்துகொள்ளுமாறு [illegible]டன் வேண்டப்பட்டு வருகிறது.

தெல்லிப்பழை துர்க்காதேவியை வழிபட்டு, வணங்கி மகிழ்ந்து இன்புறுவோம். "அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம் பெறலாமே!" ■

# மணிக்குப் பதவியை கொடுத்தால் ஆபத்து

## கர்ச்சித்தார் கஜேந்திரகுமார்



யாழ்ப்பாணம், ஓக. 20

**தனக்கென ஓர் அணியை உருவாக்கி, கட்சியின் கொள்கைக்கு மாறாகச் செயற்பட்ட மணிவண்ணனுக்கு பதவியை வழங்குவது ஆபத்தானது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களுடன் காணொலிக் கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

மணிவண்ணன் தொடர்பில் நாங்கள் 3 மணி நேரம் தொடர்ந்து விவாதித்தோம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மத்திய குழு உறுப்பினர்களில் 3 பேர் மணிவண்ணனை கட்சியில் இருந்து நீக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தார்கள். ஏனையவர்கள் மணிவண்ணனை கட்சியில் இருந்து நீக்கலாம் என்பதற்கு அப்பால் அவருக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே பேசியிருந்தார்கள்.

எமது கட்சியைப் பொறுத்த வரையில் எந்த விடயமானாலும் எம்மிடையே பேசித் தான் முடிவெடுக்கிறோம். நான் ஒரு கருத்தை முன்வைக்கும் போது அதைக் கண்ணை மூடிக்கொண்டு கட்சியில் உள்ள அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எங்கள் கட்சி இல்லை.

கட்சியின் முடிவை கட்சிக்குள்ளேயே விமர்சித்து கட்சிக்குள் ஒரு அணியை உருவாக்குவதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. மணிவண்ணன் அந்தக் கோணத்தில் செயற்பட்டது தான் எங்களுக்குப் பிரச்சினை. விருப்பு வாக்குப் பிரச்சினை இல்லை. சுகாஸுக்கும் மணிவண்ணனுக்கும் விருப்பு வாக்கு விடயத்தில் பிரச்சினைகள் இருந்தது உண்மை. மணிவண்ணன் கூறுகிறார் தன்னுடைய வளர்ச்சி கஜேந்திரனுக்கு போட்டியாக உள்ளதால் தான் தனக்கு எதிரான பரப்புரைகளைச் செய்கிறார் என்று.

மணிவண்ணனுக்கும் சுகாஸுக்கும் 800 விருப்பு வாக்குகள் தான் வித்தியாசம். அப்படி என்றால் கஜன் சுகாஸுக்கு எதிராகவும் கதைத்திருக்க வேண்டும்.

கஜனும் நானும் தன்னுடைய வளர்ச்சியை சகித்துக்கொள்ள முடியாத நிலையில் தனக்கு எதிரான நடவடிக்கையை எடுக்கின்றோம் என்ற விடயத்தை நேற்றுமுன்தினம் கோப்பாய் பிரதேசத்தில் நடந்த கூட்டத்தில் மணி பேசியிருக்கின்றார். தேசிய அமைப்பாளர் என்ற பதவியை வைத்துக்கொண்டு கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தி, கொள்கைக்கு மாறாக தனக்கொரு அணியை பலம் சேர்க்கிற நிலையில் அவருக்கு இப்பதவியைத் தொடர்ந்து வழங்குவது ஆபத்தானது. மணிவண்ணனுக்கு கட்சியில் இனி பதவியை வழங்க முடியாது. ஆனால் அவர் தொடர்ந்தும் உறுப்பினராக இருக்க முடியும். அவர் எதிர்காலத்தில் கட்சியில் எவ்வாறு செயற்படுகிறார் என்பதைப் பொறுத்தே எமது முடிவுகள் இருக்கும் - என்றார். (ப-20)

# மருத்துவர் சிவரூபனுக்கு எப்போது விடுதலை?

*பளை மக்கள் கேள்வி*

கிளிநொச்சி, ஓக. 20

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டுள்ளார் என்ற சந்தேகத்தில், அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பளை மருத்துவமனையின் மருத்துவர் சின்னையா சிவரூபன் எப்போது விடுதலை செய்யப்படுவார் என்று பளைப் பிரதேச மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது;

மருத்துவர் சிவரூபனிடம் சிகிச்சை பெறுவதற்காக பளைப் பிரதேச மக்கள் மட்டுமன்றி, வடமராட்சி கிழக்கு உடுத்துறை, மருதங்கேணி, தாளையடி போன்ற தூரப் பிரதேச கிராமங்களில் இருந்தும் நோயாளர்கள் வருகின்றனர். மனிதநேயமுடைய மருத்துவரின் விடுதலைக்காக பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஏங்கிக் கொண்டுள்ளார்கள்.

தற்போது வைத்தியசாலையின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டநிலையில் உள்ளன. சீவரூபன் இல்லாத காரணத்தினால் நோயாளர்களில் ஒரு பகுதியினர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்றனர் எனவே மக்களுடைய நலனைக் கருத்திற்கொண்டு மருத்துவர் விரைவில் விடுதலை செய்யப்படவேண்டும் என்றனர்.

கடந்த வருடம் ஓகஸ்ட் 18ஆம் திகதி இரவு வைத்தியசாலைக் கடமைக்கு வந்துகொண்டிருந்த மருத்துவர் சிவரூபன் ஆனையிறவுச் சோதனைச்சாவடியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார். அவர் கைதுசெய்யப்பட்டு நேற்றுமுன்தினம் ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ளது. தற்போது வரை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டே வருகிறார். தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் கட்டியெழுப்ப இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார் எனக் கிடைத்த தகவலின் பேரில் அவர் கைதுசெய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகச் செய்தித் தொடர்பாளர் ருவான் குணசேகர தெரிவித்திருந்தார்.

விசாரணையின்போது மருத்துவர் வழங்கிய தகவல்களின்படி சின்னமணி கணேஷ்வரன், ரத்தினம் கிருஷ்ணராசா, மோகனசுந்தரம் சின்னத்துரை, விநாயகமூர்த்தி நெஜிலன், ரி. நிமல்ராஜ் மற்றும் ரூபன் ஜதுசன் ஆகிய 6 பேர் கைது செய்யப்பட்டனர். அத்தோடு பளை கரந்தாய் பகுதியில் பெரிய அளவிலான வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், யாழ்ப்பாணத்தில் உள்ள ஆழியவளை கடலின் பாறைகள் மத்தியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்கள் அடங்கிய மற்றொரு பொதி மீட்கப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. (ப-6)

# பகலிலும் மின்சாரம் துண்டிக்கப்படலாம்

*மின்சார சபை அறிவிப்பு*

தேவை ஏற்படின் இரவு வேளைகளுக்கு மேலதிகமாக பகல் வேளைகளிலும் மின்சாரத் துண்டிப்பை ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மின்சார சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை மின்சார சபையின் தலைவர் விஜித ஹேரத்;

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகளை வழமைக்குக் கொண்டு வருவதற்கு இரண்டு நாள்கள் எடுக்கும். பகல் வேளைகளில் சூரிய சக்தியின் ஊடாக மின்சார உற்பத்தி இடம்பெறுகின்றது. எவ்வாறாயினும் பகல் வேளைகளில் மின்சாரத்தின் தேவை அதிகரிக்கும்பட்சத்தில் 1. 45 மணித்தியாலத்துக்கு மின்சாரத்தைத் துண்டிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை மின்சாரத் துண்டிப்பை அடுத்து நீர் விநியோகத்தில் பாதிப்பு நிலவுவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. மின்பிறப்பாக்கி இல்லாத பியகம அம்பத்தலை மற்றும் கெத்ஹேறன உள்ளிட்ட நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் காணப்படுகின்ற பகுதியில் மின்சாரத்தைத் துண்டிக்க வேண்டாமென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை இலங்கை மின்சார சபையிடம் கோரியுள்ளது. (ப)

# மின்சாரத் தடை திட்டமிட்ட செயல்

*ஐ.ம.ச குற்றச்சாட்டு*

கொழும்பு, ஓக. 20

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடியை சமகால அரசாங்கம் திட்டமிட்டு ஏற்படுத்தியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கம் திட்டமிட்டு கடந்த திங்கட்கிழமை 6 மணித்தியாலங்கள் மின்சாரத் தடையை ஏற்படுத்தியதென ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி குற்றம் சாட்டியுள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்த திட்டமிட்ட செயலால் தனியார் துறையிடம் அதிக விலையில் மின்சாரம் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தயாராகி உள்ளது. புதிய அரசாங்கத்தில் அமைச்சர் பதவி பொறுப்பேற்றவுடனேயே நாட்டை இருளில் வைத்தமையானது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இது வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட செயலாகும்.

எங்கள் நாட்டின் சம்பிரதாயத்திற்கமைய எதிர்வரும் சில மாதங்களுக்கு மின்சாரத் தடை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. தனியார் பிரிவில் மின்சாரம் கொள்வனவு செய்வதற்கான தகவல் ஒன்றை நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கே மின்சாரம் தடை செய்யப்பட்டது. எதிர்வரும் நாள்களிலும் மின்சாரம் தடை செய்யப்படும். அதற்கிடையில் பல்வேறு முறையில் தனியார் பிரிவில் மின்சாரம் கொள்வனவு செய்யப்படுவதற்கும் ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன - என்றார். (ப)

# படகுகளைக் கரையேற்ற பொறிமுறை உருவாக்கம்

*குருநகரில் அதிகாரிகள் கள ஆய்வு*

யாழ்ப்பாணம், ஓக. 20


திருத்த வேலைகளுக்காக மீன்பிடிப் படகுகளை இறங்கு துறையில் கரையேற்றுவதற்கான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பான கள ஆய்வுப் பணிகள் யாழ்ப்பாணம் குருநகரில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கு அமைய நேற்று முன்தினம் குறித்த பிரதேசத்துக்குச் சென்ற மீன்பிடித் திணைக்களத்தின் அதிகாரிகள் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

குருநகர் இறங்குதுறையைப் பயன்படுத்தி அந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 400 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடிப் படகுகள் மூலம் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் படகுகள் பழுதடைகின்ற போது அவற்றைக் கரையேற்றுவதற்கு முடியாமல் மீனவர்கள் தவித்தனர். இந்த நிலையில் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அந்தப் படகுகளைக் கரையேற்றுவதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்கித் தருமாறு அவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கையை முன்வைத்தனர் என்றும் அதன் அடிப்படையிலேயே குறித்த கள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, தொண்டைமானாறு பிரதேசத்துக்கு நேற்றுச் சென்ற கடற்றொழில் திணைக்களத்தினர் மற்றும் களப்புப் பாதுகாப்பு, அபிவிருத்திப் பிரிவினர். தொண்டைமானாறு களப்பினுள் காணப்படும் இடிந்த பழைய பாலத்தின் அணைக்கட்டை அகற்றும் வேலைத்திட்டங்களை அவதானித்ததுடன் ஏற்கனவே சுமார் 50 வீதமான பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் எஞ்சிய பணிகளை விரைவுபடுத்துவதற்கான அறிவுறுத்தல்களையும் வழங்கியிருந்தனர். (ப)

## மரண அறிவித்தல்



தோற்றம் 19.11.1949 — மறைவு 08.08.2020

### முத்தையா உத்தமபுத்திரன் (செட்டி)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி பேர்லினை வசிப் பிடமாகவும் கொண்ட முத்தையா உத்தமபுத்திரன் கடந்த 08.08.2020 அன்று ஜேர்மனி பேர்லினில் கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா -நாகம்மா தம் பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தம் - பாக்கியலட்சுமி தம்பதியரின் மூத்த மரு மகனும், சுசிலா (கிளி)வின் அன்புக் கணவரும், சுசீந்திரன், மயூரன், பயோதரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயலட்சுமியின் சகோதரரும், காலஞ்சென்ற சந்திரகுமார், ஸ்ரீகரன், ஜீவாகரன், சுதர்சன், பிரேமா, சர்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜேர்மன் பேர்லினில் உள்ள மலர்ச்சாலையில் நாளை (21.08.2020) வெள்ளிக்கிழமை இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முற்பகல் 10.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜேர்மனி. குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### தர்மரட்ணம் எட்வின் அமிர்தராஜா (அருந்தவம்)

**(Old Student Of Urumpirai Hindu College and Jaffna Central College, An ex- Banker - Bank Of Ceylon, Businessman in Urumpirai )**

யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய், கொழும்பு, சிலாபம், பிரித்தானியா, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிட மாகவும் கொண்ட தர்மரட்ணம் எட்வின் அமிர்தராஜா கடந்த (12.08.2020) புதன்கிழமை லண்டனில் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மரட்ணம், றோஸ் நன்னித்தம்பி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர் களான சீவநாயகம், கண்மணி, தம்பதிகளின் அன்பு மருமக னும், விக்டோரின் வர்ணாதேவி அவர்களின் அன்புக் கணவ ரும், குட்வின் வர்ணன், மெர்வின் அமிர்தன் (அமீர்) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், ஆனந்தி, ஷிரோமி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான திருமதி றோசாபெல், சாமுவேல் ஆனந்தராஜா **(Killi - Srilanka),** ராணி டெய்சி தங்கமலர் ( கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற சபாரத்தினம், சந்திராதேவி, நோயல் ஹென்ஸ்மன் ஆகி யோரின் அன்பு மைத்துனரும், எய்மி, பிரியன், கிருபன், சாம் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது நன்றியுடன் கூடிய நல்லடக்க ஆராதனை இன்று (20.08.2020) வியாழக்கிழமை பரிசுத்த காபிரியேல் தேவால யத்தில் நடைபெற்று பின்னர் மனோர் பார்க் சேமக்காலையில் மதியம் 12.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- பிள்ளைகள்
**Goodwin Varnan - Son - +4475 0511 1262**
**Merwin Ameer - Son - +4477 0353 1785**

# பிரதேச அலுவலர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள்

சாவகச்சேரி, ஓக.20
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணி யகத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் கொவிட் 19 தொடர்பான பி.சி.ஆர் பரிசோத னைகளை, பிரதேச செயலக அலுவ லர்களுக்கும் மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள து. பிர தேச செயலகத்தினால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக, எதிர் வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் பரிசோ தனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதி காரி மருத்துவர் சு.சுதோகுமாரின் ஏற் பாட்டில், பிரதேச பொதுச் சுகாதார பரி சோதகர் பிரிவுகளில் கொவிட் 19 தொடர் பான பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-9)

**NOTICE**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

**WALK – IN - INTERVIEW**

| | | |
|---|---|---|
| POST OF PROJECT ASSISTANT (FULL TIME) | - ON CONTRACT BASIS - | 02 VACANCIES |
| POST OF TECHNICAL ASSISTANT (FULL TIME) | - ON CONTRACT BASIS - | 02 VACANCIES |

Walk in Interview for the above posts (Full Time) – On Contract Basis will be held as follows

| | | |
|---|---|---|
| Project Assistant | 26.08.2020 | 09.00AM to 12.00 Noon |
| Technical Assistants | 29.08.2020 | 09.00 AM to 12.00 Noon |

Walk in Interview will be held at the Mini Board Room, Administration Block of the University of Jaffna.

Eligible Candidates are requested to be present for an interview with self-prepared application in the prescribed format along with relevant original certificates and the National Identity Card (NIC) on the date and the time mentioned above.

**For further details please visit the University of Jaffna website www.jfn.ac.lk.**


**Registrar**

## சைக்கிள் திருட்டு; சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 20
சைக்கிள் திருட்டுப்போன வழக்கொன்றின் சந்தேகநபர் சுமார் ஒருவார காலத்தின் பின் னர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
சங்கானை சந்தைக்கு அருகில் கடந்தவாரம் சைக்கிளொன்று திருட்டுப்போயுள்ளது. இதையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட் டது. சந்தேகநபர்தொடர்பானவிவரங்களும் வழங்கப்பட்டது. குறித்தசந்தேகநபர் இளவா லையில் வைத்து நேற்று அடையாளம் காணப்பட்டதை அடுத்து அவர் கைது செய் யப்பட்டார். சந்தேகநபர் ஆனைக்கோட்டை யைச் சேர்ந்தவர். 67 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-26)

## மரண அறிவித்தல்

### நவரத்தினம் சந்திரகாந்தன் (ராசன்)



தோற்றம் 30.04.1961 — மறைவு 18.08.2020

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாக வும் கொண்ட நவரத்தினம் சந்திரகாந்தன் (ராசன்) நேற்று முன்தினம் (18.08.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - சிவஞானவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பழனிவேலு - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் அன்புக் கணவரும், மாதுரி, காலஞ்சென்ற சாரங்கன் மற்றும் துஷித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், டிவேந்தின் அன்பு மாம னாரும், கருணைகாந்தன் (கனடா), காந்தமலர் (கனடா), காலஞ் சென்ற விஜயகாந்தன் (கனடா), மற்றும் பவளமலர் (அச்சுவேலி), சந்திரமலர் (கனடா), ரஞ்சிதமலர் (ஆசிரியை திருகோணமலை), ஸ்ரீகாந்தன் (கனடா), சிறிமுருகதாஸ்காந்தன் (ஆசிரிய ஆலோசகர் யாழ் கல்வி வலயம்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமாரி (கனடா), காலஞ்சென்ற வைகுந்தவாசன் மற்றும் சாந்தமலர் (கனடா), சிவராசா (அச்சுவேலி), காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராசா (கனடா), மற்றும் சிவேந்திரராசா (ஆசிரியர் தி/கப்பற்றுறை சரஸ்வதி வித்தியாலயம்), ஜெகதீஸ்வரி (கனடா), சிவாஸ்வரி (ஆசிரியை யா/ கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம், நீர்வேலி), இந்திராதேவி (கனடா), சியாமளாதேவி (கனடா), பரமேஸ்வரன் (அதிபர் கொ/ பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), விக்னேஸ்வரன் (கனடா), பாலேஸ் வரன் (நோர்வே), சித்திராதேவி (லண்டன்), ஜெகதீஸ்வரன் (லண் டன்), ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவகாந்தன், துஸ்யானி, மயூரன், நிசாந்தன், நிசானி, கணேஸ், தயாளன், திலீப்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் வேலணை பிரதேச செயலகம்), ஆகியோரின் சிறிய தந்தையும், சாதனா, கர்சனா, கீர்த்தனா, கபிர்த்தனா (மாணவி), யதுர்சன் (மாணவன் - யாழ். இந்துக் கல்லூரி), பானுசங்கர் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), கௌதமன் (பொறியியலாளர் - யப்பான்), ஆகியோரின் பெரிய தந்தையும், நிசாந்தினி, கஜேந்தினி, அருண்யா (அஞ்சல் அதிபர் யாழ்ப்பாணம்), லக்சலா (கிளிநொச்சி பல்கலைக்கழக முகாமைத்துவ உதவியாளர்), அபிராமி, அபிராம், சரண்யா (பொறியியலாளர் - சிங்கப்பூர்), கிருஸ்ணியா (பொறியியலாளர் - யப்பான்), செந்தில்ராஜ் (கொழும்பு பல்கலைக் கழக முகாமைத்துவ பீட மாணவன்), கஜி, கவிதாஸ், முருகன், ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் (25.08.2020) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். அஞ்சலி நிகழ்வு அச்சுவேலி தெற்கில் உள்ள சகோதரியின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
சிறிமுருகதாஸ்காந்தன் (0777296311), பவளமலர் (0763226079), ரஞ்சிதமலர் (0771095497)
சகோதரர்கள்

## அறிவித்தல் இனிய வாழ்வு இல்லம் பணிவெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரல்

**இனிய வாழ்வு இல்லத்தில் கீழ்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

- **பணிநிலை :- 1**
  கேட்டல், பார்வை குறைபாடுடைய பிள்ளைகளை பராமரித்தல் (ஆண், பெண்)
- **பணிநிலை : - 2**
  சமையற் பணியாளர் (பெண்)
- **தகைமைகள்:**
  1) 40 வயது தொடக்கம் 60 வயதிற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.
  2) உடல்நலம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்.
  3) ஒழுக்க சீலராக இருக்க வேண்டும்.
  4) இல்லத்தில் தங்கியிருந்து பணி செய்தல் வேண்டும்
  5) சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
  6) கல்வித்தரம் 8 வரையில் இருந்தால் நன்று

குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்கள் விபரங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 31.08.2020 இற்கு முன்னர் கிடைக் கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்பு இல: 077 775 2566/ 021 206 1949 / 077 590 3184

முகவரி :
தலைவர் / செயலாளர்
இனிய வாழ்வு இல்லம், தேவிபுரம்
"அ" பகுதி, புதுக்குடியிருப்பு.

முகாமையாளர்.

---

யாழ் நகரில்
Signature
The Achiever's Choice
இன்
மாபெரும்
மலிவு விற்பனை
60%
வரை
விலைக் கழிவு
SHIRTS
ரூ.400
முதல்
ஆவணி மாதம் 21ம், 22ம், 23ம்
மற்றும் 24ம் திகதிகளில்
காலை 10.00 முதல்
இடம் : YMCA Hall
109, Kandy Road, Kachcheri,
Jaffna
Signature
The Achiever's Choice
தொடர்புகளுக்கு : 077 476 6296 / 077 396 0730
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

---

ES Printers
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

---

**Faculty of Science, University of Jaffna**
**NOTICE**

**Enrolment and Orientation Programmes**
for the newly admitted students 2018/2019

The Enrolment and Orientation Programmes for the newly admitted first-year students to the Faculty of Science, University of Jaffna for the academic year 2018/2019 will be held onMonday 24.08.2020, 8.00 am to 5.00 pm at the Kailasapathy Auditorium and the Faculty premises. The new students are requested to participate in these Programmes.

*Registrar*

---

## University of Jaffna
## Walk- in Interview

Post of Temporary Assistant Lecturers /Demonstrators /Research Assistant
(On Contract)

Faculty of Medicine, University of Jaffna

The above walk-in interview will be held on 24.08.2020 at 2.00pm at the Board Room, Faculty of Medicine,University of Jaffna, Adiyapatham Road, Kokuvil.

Those who have passed the Final Examination for the following discipline from the state Universities or UGC recognized Foreign Universities.

- Clinical / Para Clinical Departments - Medical Degrees
- Pre- Clinical Departments - Medical Degrees/ Dental Degrees /Veterinary Sciences Degrees

In addition to the above degrees Human Biology /Medical Laboratory Sciences will be considered for the Department of Biochemistry.

You are kindly requested to bring your original Educational and other relevant certificates along with the certified copies.

Registrar
University of Jaffna

---

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## பதவி வெற்றிடம்

**உபவிடுதிக் காப்பாளர்கள் : பெண்**
- க.பொ.த சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை.
- விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம். உணவும் தங்குமிட வசதியும் இலவசம்.
- வயதெல்லை : 25 - 50
- சம்பள அளவுத் திட்டம் : ரூபா 12,010 - 6X 250 + 14 X280 -17,430/-.
- விசேட படி : ரூபா 6,000.00 (மாதமொன்றுக்கு).

**பாதுகாப்பு அலுவலர் (பகல் - பெண்)**
- க.பொ.த சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை.
- வயதெல்லை : 25 - 50
- சம்பள அளவுத் திட்டம் : பேசித்தீர்மானிக்கப்படும்.

**சமையலாளர் : பெண் (கருணை இல்லம், உரும்பிராய்)**
- வயதெல்லை : 25 - 50
- சம்பள அளவுத் திட்டம் : பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் 31.08.2020 இற்கு முன்னர் சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி.**
**தொலைபேசி இல : 021 222 6525**

**தி.செல்வமனோகரன்**
**செயலாளர்**

**பணியாளர்கள் தேவை - (VACANCY)**

1. கணிய அளவியலாளர் (QS) - (NCT/HND IN QS)
2. தொழில்நுட்ப அலுவலர் (TO) - (NCT/HND IN CIVIL)

**Contact No : 0777 245 399**

(திங்கள் - சனி வரை 8.30AM - 5.00PM மணிவரை மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**E-mail :**
global19construction@gmail. com

## பெயர் மாற்றம்

இல. 905, விநாயகபுரம் துணுக்காயில் வசித்து வரும் **ஐயம்பிள்ளை ரதிதேவி** என்னும் எனது பெயரை **ஐயம்பிள்ளை சந்திராதேவி** என மாற்றம் செய்கின்றேன் இனிவரும் காலங்களில் எவ்வகை ஆவணத்திலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என தெரியப்படுத்துகின்றேன்

**ஐ. சந்திராதேவி**

## பஸ்– டிரைக்டர்– பட்டா வாகனங்கள் மோதி விபத்து

கொடிகாமம், ஓக. 20

கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களை ஏற்றிவந்த தனியார் பேருந்தும், டிரைக்டர் வாகனமும், பட்டா ரக வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகின. இந்தச் சம்பவம் கொடிகாமம் ஏ9 வீதி இராமாவில் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கள்ள மணல் ஏற்றிவந்த டிரைக்டர் வாகனம் ஒன்று குறுக்கு வீதியை அவசரமாகக் கடக்க முற்பட்ட போது கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களை ஏற்றிவந்த பஸ்ஸுடன் மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. அதனையடுத்து பின்னால் வந்த பட்டா ரக வாகனம் பேருந்துடன் மோதியது. பேருந்தும் பட்டா வாகனமும் சிறு சேதங்களுக்கு உள்ளாகின. (ம–159)

## வீடு வாடகைக்கு

நல்லூர் செட்டித்தெருவில் நான்கு அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

**077 416 1892, 071 856 2025**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்**

### வெளிவாரிப் பரீட்சைகள்

**வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)**

1. முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை – 2018

மேற்படி பரீட்சையினை 30.08.2020 (ஞாயிற்றுக்கிழமை) தொடக்கம் 13.09.2020 (ஞாயிற்றுக்கிழமை) வரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணையினையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 26.08.2020 (புதன்கிழமை) தொடக்கம் 28.08.2020 (வெள்ளிக்கிழமை) வரை திறந்தமற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 – 222 – 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

**பதிவாளர்**
**19.08.2020**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**பிறப்பு** 30 . 06 . 1943
**இறப்பு** 06 . 08 . 2020

கடந்த (06.08.2020) வியாழக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் திருமதி**
### சின்னராஜா இராஜேஸ்வரி
**(தவில் மாமேதை N.R. சின்னராஜாவின் அன்பு மனைவி)**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (20.08.2020) வியாழக்கிழமை காலை 06.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (21.08.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு உங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.**

**கோவில் வாசல்,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**குடும்பத்தினர்**
**077 628 0254, 077 519 4510**

**எங்கள் அன்புத் தெய்வத்திற்கு**

## ஆண்டுகள் பதினான்கு



**அமரர்**
### சுப்பிரமணியம் பசுபதி

**தோற்றம்** 29.11.1935
**மறைவு** 26.08.2006

**திதி: துதியை**
**20.08.2020 வியாழக்கிழமை**

ஆண்டுகள் பதினான்கு ஆனதுவோ அப்பா!
நீங்கள் அருகிருந்தெம் மனம் நிறைந்த
ஆதரவுக்கேங்குகின்றோம்!
வழிகாட்டும் ஒளியாய் - எம் விழியாய்
உங்கள் வார்த்தைகள் எம்மோடு என்றும் வாழும்
வணங்குகின்றோம்.

'பசுபதியம்'
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

**குடும்பத்தினர்**

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹா

## நினைவலைகள்

**முதலாம் ஆண்டு** **12 ஆம் ஆண்டு**





### சுந்தரம் கனகரத்தினம்
தோற்றம் 19.08.1939
மறைவு 31.08.2019

### கனகரத்தினம் நாகம்மா
தோற்றம் 07.02.1945
மறைவு 21.08.2008

உயரிய சான்றோர் ஞானம் போதித்து
தன்னலமற்ற தாய்மைக்கு புகழ் சேர்த்து
எம்மை விட்டகன்று
பதிபதம் இணைந்து பத்தினியாய் வாழ்வீர்

அளவெட்டி தெற்கு, குடும்பத்தினர்,

## கண்ணீர் அஞ்சலி



யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க முன்னை நாள் தலைவரும், தற்போதைய செயலாளருமாகிய

**நடராசா விவேகானந்தராசா**

அவர்கள் 15.08.2020 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.
அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்,**
**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய்.**

## வேலைவாய்ப்பு

பிரபல தொலைத் தொடர்பு நிறுவனத்திற்கு பணிபுரிய வேலையாள்கள் தேவை.

(மாதாந்தம் 50,000 ரூபாவிற்கு மேல் வருமானம் பெறலாம்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



**பதவி வெற்றிடங்கள் - DSR - 03 (ஆண்)**
**முகாமைத்துவ உதவியாளர் - 01 - (பெண்)**

தொடர்புக்கு:-
078 5000 692, 077 1712 952

# மரண அறிவித்தல்

## விக்கினேஸ்வரன் சிவபாக்கியம்

தோற்றம்
25
-
08
-
1943



மறைவு
19
-
08
-
2020

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தோப்பை வசிப்பிடமாகவும் கொண்ட விக்கினேஸ்வரன் சிவபாக்கியம் நேற்று (19.08.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விக்கினேஸ்வரனின் அன்பு மனைவியும் சிவகுமார் (லண்டன்), சிவனேசன் (பிரான்ஸ்), வனிதா (லண்டன்), வாசுகி ஆகியோரின் அன்பு தாயாரும், நந்தகுமார் (உப பொலிஸ் பரிசோதகர், மானிப்பாய் பொலிஸ்), சிறீதேவி (லண்டன்), தர்சினி (பிரான்ஸ்), முகிலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், பரமேஸ்வரன், செல்வரட்ணம் (லண்டன்), பாலசுப்பிரமணியம் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சைலரூபன், வைஸ்ணவி (லண்டன்), மிதுசா (லண்டன்), அபிநா (லண்டன்), அச்சயா (லண்டன்), தனுஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.08.2020) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
**குடும்பத்தினர்.**
**0760278607**

இராஜ வீதி,
தோப்பு, அச்சுவேலி.

# கால்நடைகளின் நலன்கருதி கேணிகளைச் சீரமையுங்கள்

## வலி.தென்மேற்கு உறுப்பினர்கள் கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஓக. 20

குடி தண்ணீரைத் தேடி அலைந்து திரியும் கால்நடைகளின் நலன் கருதி, நவாலிப் பகுதியில் வீதியோரத்தில் முன்னோர்களால் அமைக்கப்பட்ட சுமார் 200 வருடங்கள் பழமை வாய்ந்த இரு கேணிகளை அபிவிருத்தி செய்து தருமாறு வலி தென்மேற்கு பிரதேசசபை உறுப்பினர்கள் தவிசாளரைக் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் தெரிவித்ததாவது;

கேணிகளின் நிலைப்பாடு குறித்து பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு மட்டுமல்ல, நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கும் தெரியப்படுத்தப்பட்டது. இன்று வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வலி.தென் மேற்கு பிரதேசத்தில் நவாலிப் பகுதியில் கட்டி வளர்க்கப்படும் கால்நடைகளை, காலபோக நெல் அறுவடைக்குப் பின் மேய்ச்சலுக்காக வெளியே விடுவது வழக்கம். வயல் வெளியில் அலைந்து திரியும் கால்நடைகளின் குடி தண்ணீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு நவாலி வடக்கு, நவாலி தெற்கு ஆகிய இடங்களில் வீதியோரங்களில் 1883 ஆம் ஆண்டு முன்னோர்களால் இரு கேணிகள் அமைக்கப்பட்டிருந்தன. கொத்துக்கட்டிக் கேணி, கற்கேணி என அழைக்கப்படும் இந்தக் கேணிகள் பராமரிப்பின்றி இடிந்து மூடப்படும் நிலையில் உள்ளன. சிலர் இக் கேணிகளில் திண்மக் கழிவுகளையும் கொட்டி வருகின்றனர். (ஐ-115)

# குறும்படம் திரையிடலும் கலந்துரையாடலும்

புங்குடுதீவு, ஓக.20

விமல்ராஜ்ஜின் நெறியாள்கையில் உருவான "காக்கைக் குஞ்சுகள்" எனும் ஆவண விழிப்புணர்வுக் குறும்பட திரையிடலும், கலந்துரையாடலும் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு வட இலங்கை சர்வோதயம் புங்குடுதீவு வளாகத்தில் நடைபெறவுள்ளன.


வடபகுதியில், மிக முக்கியமாக தீவகத்தில் நிலவு கின்ற நன்னீர்த் தட்டுப்பாட்டுப் பிரச்சினைக்கு ஒரு முன்னெடுப்பாக இந்த நிகழ்வு அமையவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் மாணிக்கவாசகர் இளம்பிறையன், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன், மூத்த கூட்டுறவாளர் சுப்பிரமணியம் கருணாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# மரண அறிவித்தல்

## லயன். ஆறுமுகம் வரதராஜன் MJF, J.P,

(ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர்)



பூநகரி பரமன்கிராயை பிறப்பிடமாகவும், யாழ் கொழும்புத்துறை, "இராஜசக்தி" வண் வட மேற்கு ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட லயன் ஆறுமுகம் வரதராஜன் நேற்று (19.08.2020) புதன்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் புவனேஸ்வரி தம்பதியினரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் பராசக்தி தம்பதியினரின் மருமகனும், தையல் நாயகியின் அன்புக்கணவரும், தயானுஷாவின் (உபதபாலதிபர் பிடாரி கோயிலடி) அன்புத் தந்தையும் அருட்பணி ராஜ்குமார் (குரு யாழ் பல்கலைக் கழக தோமா சிற்றாலயம், ஆசிரியர் வயாவிளான் மத்திய கல்லூரி) அன்பு மாமனாரும், ரூபிதன், ராகவி ஆகியோரின் அன்பு பேரனும், பத்மராணி - நாகேந்திரன், பத்மாவதி - சிறி சேயானந்தராஜா, யோகேஸ்வரி - சுகுமார், யுகலோகராஜன், சத்தியபாமா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அருளானந்தன், சிவலோகநாயகி - சபாரத்தினம், தில்லைநாயகி மற்றும் கருணாநிதி, மகாலட்சுமி - செல்வநாயகம் , தயாநிதி மற்றும் காலஞ்சென்ற குணானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.08.2020) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் "இராஜசக்தி" வண் வட மேற்கு ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (J/12843)

"இராஜ சக்தி",
பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை

தகவல்: குடும்பத்தினர்.
0776682281

# பஸ்ஸை மறித்து குழுவொன்று தாக்கு

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ்ப்பாணம் பொன்னாலையில் இருந்து வட்டுக்கோட்டைச் சந்தி வழியாகப் பயணித்த பஸ் வண்டியை வழிமறித்த கும்பல் ஒன்று வண்டி மீதும் அதில் பயணித்தவர்கள் மீதும் நேற்றுத் தாக்குதல் நடத்தியுள்ளது.

நேற்று பஸ் ஒன்று வீதியில் நின்ற மாட்டை மோதியதால் மாடு இறந்துவிட்டது.

சில மணி நேரங்களுக்குப் பின்னர் அந்தவழியால் வந்த விசேட சேவை பஸ்ஸை மறித்து அதன் மீதும் அதன் சாரதி மற்றும் பயணிகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது பயணி ஒருவரின் சங்கிலி ஒன்று தொலைந்துள்ளது என்றும் பயணிகள் ஐவர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த27)

## 'கறாஜ்' ஜின்...

பொலிஸார் நேற்று கண்டறிந்துள்ளனர். அது குறித்து அவர்கள் அதிர்ச்சியும் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அங்கு ஆயுதங்கள், பொலிஸார் மற்றும் படையினர் பயன்படுத்தும் சீருடைகள், துணிகளையும் அவர்கள் மீட்டுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் புலனாய்வு பிரிவினர் மற்றும் மீரிகம பொலிஸார் இணைந்து அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்தனர். அங்கு 3.8 ரக துப்பாக்கி, கல்கட்டஸ் துப்பாக்கி 2, 3.8 ரக துப்பாக்கி ரவைகள் 64, ரி-56 ரக துப்பாக்கி ரவை, கைவிலங்குகள், இராணுவத்தினர் மற்றும் கடற்படையினரின் சீருடைகள், பொலிஸ் சீருடைக்கான துணிகள் 5 மீற்றர், சிவில் பாதுகாப்புப் படையினரின் சீருடைக்கான துணிகள் 5 மீற்றர், இராணுவ பாதணிகள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

பிரதான சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

குறித்த சந்தேகநபர் துப்பாக்கி உற்பத்தி தொடர்பில் 1993 ஆம் ஆண்டிலிருந்து 2000ஆம் ஆண்டு வரை சிறைத்தண்டனை அனுபவித்து விடுதலையானவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் திட்டமிட்ட குற்றச்செயல்கள் தொடர்பான குழுவினருக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் ஆயுத விற்பனை செய்து வந்துள்ளாரென்று மேலதிக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (து)

## 20 ஆவது...

பர் மாதம் முதல் வாரத்திலிருந்து முன்னெடுக்கப்பட்டு ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னர் திருத்தத்தை நிறைவேற்ற அரசு எதிர்பார்க்கிறது என்று ஆளும் தரப்பு தெரிவித்தது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான முதலாவது அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் இல்லாமல்செய்யப்பட்டு 20ஆவது திருத்தத்தை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இந்தநிலையிலேயே ஐவர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (து)

## 9 ஆவது...

பதவிகளுக்கான தேர்வுகள் இடம்பெறும். உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் சபை அமர்வுகள் சபாநாயகரால் ஒத்திவைக்கப்படும். பின்னர் பிற்பகல் 3 மணிக்கு நாடாளுமன்றம் மீண்டும் கூடும். இதன்போது அரசின் கொள்கை விளக்க உரையை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்வைக்கவுள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியே நாடாளுமன்றக்கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது. அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-44)

## பட்டதாரி...

ராஜபக்ச அறிமுகம் செய்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் பட்டதாரிகளை அரச வேலைக்குள் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. இந்த நிலையில், மேலம் 10 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்க அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

புதிய அரசின் முதலாவது அமைச்சரவை கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதேநேரத்தில், பட்டதாரிகள் நியமனத்தில் உள்வாங்கப்படாதவர்கள், தமக்கு நியமனம் வழங்குமாறு கோரி ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அமைச்சரவைக் கூட்டம் நிறைவுபெற்று புறப்பட்டுக்கொண்டிருந்த ஜனாதிபதி, போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் இடத்துக்கு வந்து தனது வாகனத்தை நிறுத்தி, அனைத்து பட்டதாரிகளுக்கும் தொழில் வழங்குவதாகக் குறிப்பிட்டார். "இப்போது வீடுகளுக்குச் செல்லுங்கள் மேலும் பத்தாயிரம் பேருக்கு தொழில் வழங்குவதற்கு இன்று அனுமதி அளிக்கப்பட்டது" என்று ஜனாதிபதி ஆர்பாட்டக்காரர்களிடம் தெரிவித்தார். (து)

## கிளிநொச்சி...

டிப்போ கனகபுரம் வீதியில் மாவீரர் துயிலுமில்லம் பகுதியின் வீதி வளைவில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி காந்திகிராமம் பகுதியைச் சேர்ந்தவர்களான ஞானகுமாரன் கிருசாந்தன் (வயது 18), சுப்பிரமணியம் சுபாஸ்கரன் ஆகியோரே உயிரிழந்தனர். கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த சர்வநாதன் பவிக்சன் (வயது 20) படுகாயமடைந்தார். இவர் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்தவர்களின் சடலங்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர்.

விபத்துக்குள்ளாப் பகுதியில் கொங்கிறீற் தூண் நடப்பட்டு முட்கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது. அதன் கொங்கிறீற் தூண் ஒன்று உடைந்துள்ளது. மோட்டார் சைக்கிளும் சேதமடைந்துள்ளது. (த6,214)

## முள்ளியவளை...

காணிகளை அளவீடு செய்ய வனவளத் திணைக்களத்தினர் எடுத்த நடவடிக்கை, காணி உரிமையாளர்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

சுமார் 45 பேருக்குச் சொந்தமான காணிகளை எல்லைப்படுத்த வனவளத் திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்தக் காணிகளில் வாழைத் தோட்டங்கள், தென்னந்தோட்டங்கள், பயன்தரு மரங்கள் நடப்பட்டு, அவற்றில் இருந்து பயன்பெறும் காலத்தை எட்டியுள்ளன. இப்போது காணிகளை எல்லைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதேச சபையினரும் அதற்கு அனுமதி கொடுத்துள்ளனர் என்று காணி உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டு கின்றனர்.

1990ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்த இந்தப் பகுதி மக்கள், 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீளக் குடியமர்ந்துள்ளனர். காணிகளுக்கான உரிமப்பத்திரங்கள், சான்றுத் துண்டுகளை வைத்துள்ள இவர்கள் தங்களுக்குச் சொந்தமான காணிகளில் பயன்தரு மரங்களை நட்டுப் பராமரித்து வந்திருக்கிறார்.

இந்தக் காணிகளின் உரிமையாளர்கள் சிலருக்கு எதிராக வனவளத் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் காணி பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் ஆவணங்களைக் கொடுத்துப் பதிவு செய்யப்பட்டபோதும், அந்தக் காணிகளை மக்களுக்கு அனுமதிக்க பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் காணி உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக காணி உரிமையாளர்களால் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தானுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட அபிவிருத்திக் குழுவில் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் வரையில் காணி அளவீட்டுப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ19)

## போகிறது 19 ...

அரசமைப்பின் 17, 18 மற்றும் 19 ஆகிய திருத்தங்களில் உள்ள குறைபாடுகளை இல்லாமல்செய்து சாதகமான காரணிகளைத் தெரிவுசெய்து மேலதிகமாக ஓரிரு விடயங்களையும் உள்ளடக்கியதாகவே அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை உருவாக்குவது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

அரசமைப்பு திருத்தம் குறித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை ஏகமனதாக ஆதரவு வழங்கியது. அதன்படி புதிய அரசமைப்பு ஓரிரு வருடங்களுக்குள் உருவாக்கப்படும் என்று ஆளும் தரப்பு தெரிவித்தது.

புதிய அரசின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நடைபெற்றது.

அதில் 19ஆவது அரசமைப்புத் திருத்தம், 2021ஆம் ஆண்டுக்கான புதிய வரவு செலவுத் திட்டம் ஆகிய இரு விடயங்கள் பற்றியும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. 19ஆவது திருத்தத்தை மாற்றம் செய்தல் அல்லது இல்லாமல் செய்தல் தொடர்பான யோசனையை ஜனாதிபதி அமைச்சரவையில் முன்வைத்தார். அந்த யோசனையை அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டு 19ஆவது திருத்தத்தை இல்லாமல்செய்து 20ஆவது திருத்தத்தை உருவாக்க அமைச்சரவை ஏகமனதாக இணக்கம் தெரிவித்து அங்கீகாரம் வழங்கியது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத்தேர்தலிலும் அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை இல்லாமல்செய்து புதிய அரசமைப்பை உருவாக்குவதாக தேர்தல் பரப்புரை மேடைகளில் ராஜபக்சக்கள் கூறிவந்தனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவியேற்ற காலத்திலிருந்து அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை இல்லாமல்செய்துநாட்டுக்கு பொருந்தும் வகையிலான திருத்தத்தை மேற்கொள்வேன் என்று தெரிவித்திருந்தார்.

பொதுத்தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுள்ள நிலையிலேயே, அரசமைப்பின் 19ஆவதுதிருத்தத்தை இல்லாமல்செய்து 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதாக தீர்மானித்துள்ளது.

19ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட ஜனாதிபதியின் பதவிக் காலம், ஜனாதிபதி பதவிக்கு ஒருவர் எத்தனை தடவை போட்டியிடலாம், மற்றும் நாடாளுமன்றின் அதிகாரம், பதவிக் காலம், நாடாளுமன்றைக் கலைக்கும் அதிகாரம் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரம் ஆகிய விடயங்கள் குறித்து 20ஆவது திருத்தத்தில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## அரச வங்கிகளில்...

கக்கொண்டு அரச வங்கிகளில் இந்த ஆய்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அரச வங்கிகளில் முறைகேடுகள் இடம்பெற்றன என்று பலராலும் தொடர்ந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்த பிரதமர், விசாரணைக் குழுவை நியமித்தார்.

இதேவேளை,பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளராக றொஹான் வெலிவிட்ட நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

## தெல்லிப்பழை...

திருவிழா நடைபெறும்.

29ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சப்பை ரதத் திருவிழாவும், 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப பூசை நேரங்கள் மாற்றப்படும். அடியார்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்துக்கு வருகைதருமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (மஜ)

## கிணற்றிலிருந்து...

இராச வீதி தோப்பு பகுதியைச் சேர்ந்த விக்னேஸ்வரன் சிவபாக்கி யம் (வயது 77) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

இவருக்கு நான்கு பிள்ளைகள். மூன்று பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்து வருடாந்தம் தாயைப் பார்க்க வந்துசெல்வர். இந்த வருடம் அவர்கள் வரவில்லை என்ற மனவருத்தத்தில் இருந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவர் கிணற்றில் சடலமாக மீட்கப்பட்டார்.

பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் நேற்று விசாரணை நடத்தினார்.

(த26)

# இந்திய அரசின் 300 மில்லியனில் மன்னாரில் 144 தொடர் குடியிருப்பு

**கொழும்பு, ஓக. 20**
**மன்னாரில் 144 தொடர் குடியிருப்புக்கள் அமைக்கப்படவுள்ளன. அதற்கென இலங் மதிப்பில் இந்திய அரசு 300 மில்லியன் ரூபா நிதி வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்றுமுன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று இந்திய தூதரகம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.**



இலங்கையுடனான தொடர்புகளை மேலும் வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கில் வீடமைப்புத்திட்டங்களுக்கான உதவிகளை இந்திய அரசு வழங்கி வருகின்றது. அந்த வகையிலேயே 33 பில்லியன் ரூபா நிதியுதவியில் 50 ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
அதேவேளை பெருந்தோட்டப்பகுதியில் 11 பில்லியன் ரூபா செலவில் மேலும் 10 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான ஒப்பந்தம் 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் கைச்சாத்திடப்பட்டது.
எனவே இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் இலங்கையில் 60 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக இந்தியா இலங்கைக்கு வழங்கிய மொத்த நிதியின் அளவு 517 பில்லியன் ரூபா. அதில் 92 பில்லியன் ரூபா நிதியுதவியாகவும் 425 பில்லியன் ரூபா கடனுதவியாகவும் வழங்கப்பட்டுள்ளது என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# போதையில் சாரத்தியம் நால்வருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஓக.20
மதுபோதையில் வாகனங்கள் செலுத்திய நால்வருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
மது போதையில் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் தலைக்கவசம் இல்லாமல் வாகனம் செலுத்தியவர், மது போதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்மை மற்றும் பொலிஸாரின் சமிக்ஞையை மீறி வாகனம் செலுத்தியவர், மது போதையில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவர், மதுபோதையில் வாகனம் செலுத்தியவர் என நான்கு பேருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸார் வழக்குகள் தாக்கல் செய்தனர்.
வழக்குகள் நேற்றுப் புதன்கிழமை தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
வாகனங்களைச் செலுத்தியவர் குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து, மது போதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்மை மற்றும் தலைக்கவசம் இன்மை என குற்றஞ்சாட்டப்பட்ட வருக்கும், மது போதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்மை, பொலிஸாரின் சமிக்ஞையை மீறி வாகனம் செலுத்தியவர் ஆகியோருக்கு தலா 52 ஆயிரத்து 500 ரூபா வீதமும், மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், மது போதையில் வாகனம் செலுத்தியவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (க-9)

# பயனாளிகளின் விவரம் கோரல்

சாவகச்சேரி, ஓக.20
தேசிய வீடமைப்பு அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்டுவரும் "உங்களுக்கு ஒரு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" எனும் செயற்றிட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்படும் பயனாளிகளின், விவரங்களை அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
தலா ஆறு லட்சம் ரூபா பெறுமதியில் வீடு அமைப்பதற்கு, கிராம அலுவலர் பிரிவுக்கு ஒருவர் வீதம், தெரிவு செய்து அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# கொடிகாமம் மக்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள்

சாவகச்சேரி, ஓக.20
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின், மூன்றாவது கொவிட் 19 பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்றுப் புதன்கிழமை கொடிகாமத்தில் மேற்கொள்ளப்பட்டன.
பெருமளவானோர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.
தென்மராட்சி பிரதேசத்தில் கொவிட் 19 தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையில், சுகாதார மருத்துவ அதிகாரியின் ஏற்பாட்டில், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில், வாரத்தில் ஒரு நாள் கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.
அதற்கமைவாக கொடிகாமம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான பரிசோதனைகள் கொடிகாமம் பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள சாவகச்சேரி பிரதேச சபையின் கட்டடத்தில் மேற்கொள்ளப்பட்டன.
பரிசோதனை மேற்கொள்ள வர்த்தகர்கள், முச்சக்கரவண்டிகளின் சாரதிகள், பிரதேச சபையின் பணியாளர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர்.
இவர்களில் தெரிவுசெய்யப்பட்ட 30 பேருக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மாதிரிகள், சேகரிக்கப்பட்டு யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்டன.
சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் நாவற்குழி, சாவகச்சேரி நகரம் போன்ற பிரிவுகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்காக அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-9)

# உர விநியோகத்துக்கு டோக்கன் வழங்கல்

கைதடி, ஓக. 20
கைதடி, நுணாவில் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு மானிய உர நிறியோகத்துக்காக "டோக்கன்" வழங்கப்படவுள்ளன.
இந் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரை கைதடி நுணாவில் குமரகுருபரன் முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.
விவசாயிகள் ஏக்கர் வரி மற்றும் சந்தா செலுத்திய பற்றுச்சீட்டு போன்றவற்றை எடுத்து வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுவரை ஏக்கர் வரியைச் செலுத்தாதவர்கள் கைதடி கமநலசேவை திணைக்களத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
மேலதிக தொடர்புகளுக்கு 0766560812 என்ற இலக்கத்துக்கு தொடர்பை மேற்கொள்ளுமாறு அமைப்பின் தலைவர் சி.லோகதாஸ் அறிவித்துள்ளார். (ஐ)

# உரும்பிராயில் விபத்து; ஒருவர் கவலைக்கிடம்

யாழ்ப்பாணம், ஓக. 20
யாழ்ப்பாணத்தில் உரும்பிராய் முகாம் பகுதியில் நேற்றிரவு 10.15அளவில் இடம்பெற்ற படி மோட்டார் சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக்கிளில் சென்றவர் குருதி சிந்திய நிலையில் ஆபத்தான நிலையில் உள்ளார். படி வாகனம் தடம் புரண்டதில் அதில் பயணித்த சிலரும் காயங்களுடன் காணப்படுகின்றனர்.
விபத்தையடுத்து அந்தப் பகுதியிலுள்ளவர்கள் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். காயப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (து)

Free ஆங்கில சிங்கள வகுப்புக்கள்
4 மணித்தியாலம்
இலகு வழி கற்பித்தல் முறை
23.08.2020 - 9a.m to 1p.m(ஆங்கிலம்)
24.08.2020 - 9a.m to 1p.m (சிங்களம்)
முற்பதிவினை மேற்கொண்டு பங்குபற்றவும்
ELAS இல. 51, மாநகரசபை புதிய கட்டடத்தொகுதி
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:076 223 5678, 076 697 3040

சங்கானை மாவடி ஞானவைரவர் துணை
குலேன் லேனர்ஸ் (L)
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
பதிவு இல.: DS:1043
சாரதி அனுமதி அட்டைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு
எழுத்துப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்கு
விசேட கவனம் செலுத்தப்படும்.
வாடிக்கையாளரின் நலன் கருதி மிக விரைவில் எமது கிளைகள் சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணத்தில்....
பிரதான வீதி, சங்கானை.
T.P.: 0772719755 / 0762060364
e-mail : kulenlearners@gmail.com
Face Book : kulenlearners@gmail.com
Viber : 0768906530




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.